Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 20 ஞாயிற்றுக்கிழமை (05-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:276





வன்னி சென்ற நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரனுடன் பேசுவதை முதலாவது படத்திலும் வன்னியிலிருந்து கொழும்பு திரும்பிய பின்னர் எரிக் சொல்ஹெய்ம் பத்திரிகையாளர் மாநாடு நடத்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

முதலாவது படத்தில் எரிக் சொல்ஹெய்முக்கும் பிரபாவுக்கும் இடையில் காணப்படுபவர் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் சங்கர். இரண்டாவது படத்தில் நோர்வே வெளிவிவகார அமைச்சு அதிகாரி கிறிஸ்ரி டோல்ஸ்டோலும் காணப்படுகின்றார்.

# பிரபாவுடனும் சந்திரிகாவுடனும் மிகப் பயனுள்ள பேச்சுக்கள்!

## சமாதான முயற்சிகளை முன்னெடுக்க உதவும் என்கிறார் நோர்வே தூதுவர்

- கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் -

கொழும்பு,நவம்பர்5

**விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் தமது நாட்டின் சமாதானத் தூதுவர் - விசேட தூதுவர் - எரிக் சொல்ஹெய்ம் நடத்திய பேச்சுக்கள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்ததாக -**

**கொழும்பில் உள்ள இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ் பேர்க் தெரிவித்தார்.**

நோர்வேயைப் பொறுத்தவரையில் இந்த ஆரம்பம்,சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு பெரிதும் உதவுமென்றே கருதுகின்றோம் - என்றும் வெஸ் பேர்க் மேலும் கூறினார்.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் வன்னியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தின் சுமைகளை அடுத்த சந்ததிக்கு விட்டுவிடக் கூடாது

### முடிவுகாணப்பட வேண்டும் என்கிறார் தமிழ்ச்செல்வன்

வவுனியா,நவ.5

யுத்தத்தின் சுமைகளை அடுத்த சந்ததிக்கும் நாம் விட்டு விடக் கூடாது. எனவே தொடரும் யுத்தத்திற்கு உடனடியாக முடிவு கட்ட வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கராயனில் நேற்று நடைபெற்ற போர் எழுச்சி தொடர்பான கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



எமது காலத்தில் யுத்தத்துக்கு முடிவு காணப்பட வேண்டும். அதற்கான சூழல் எம் கண் முன்னே தெரிகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களைச் சந்தித்த ஒரு சில நாள்களில் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்துள்ளமை குறித்து அரசியல் வட்டாரங்களில் நேற்றிரவு பரவலாகப் பேசப்பட்டது. (இ-7)

### முகமாலையில் பதுங்குகுழி சேதம்

முகமாலைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் பதுங்குகுழி ஒன்றை இராணுவத்தினர் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் தாக்கி முற்றாகச் சேதப்படுத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.இந்தத் தாக்குதலின் போது 3 விடுதலைப் புலிகள் உயிரிழந்ததாகவும் தகவல் நிலையத்தின் நேற்றைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(04-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தன. அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

நேற்று வரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ 364,974/=

## சந்திரிகா - வாஜ்பாய் தொலைபேசி உரையாடல்

### இந்தியாவுக்கு விஜயம் செய்ய சந்திரிகாவுக்கு அழைப்பு

கொழும்பு,நவ.5

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் தொலைபேசியில் உரையாடி அவரிடம் சுகம் விசாரித்தார்.





பம்பாயில் முடக்குவாதத்துக்குச் சத்திரசிகிச்சை செய்து கொண்ட பின்னர் பிரதமர் வாஜ்பாய் கடந்த வாரம் புதுடில்லி திரும்பியிருந்தார்.

அவரது சுகநலத்தை விசாரிப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகாநேற்று அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

கொழும்பில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இரு நாட்டுத் தலைவர்களும் தொலைபேசியில் உரையாடியது - குசலம் விசாரித்தது - இதுவே முதல் தடவை.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ஜனாதிபதியின் தாயார் சிறிமாவோவின் மரணம் குறித்து இரங்கல் தெரிவித்தார்.

இரு தலைவர்களும் தத்தமது நாட்டு நிலைமைகள் குறித்து தொலைபேசியில் கலந்துரையாடினர். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமது அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி, பிரதமர் வாஜ்பாய்க்கு விளக்கினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை நாளை விவாதிக்கும்

கொழும்பு, நவ.5

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கும் நோர்வே சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்முக்கும் இடையில் வன்னியில் இடம்பெற்ற பேச்சுக்கள் குறித்து நாளை திங்கட்கிழமை அமைச்சரவை கூடி ஆராயும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த சமாதான முயற்சிகளை பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தவிர ஏனையோர் வரவேற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் விடுதலைப் புலிகள் தாம் உண்மையாகவே சமாதானத்தை விரும்புகிறார்களா என்பதை வெளிக்காட்ட வேண்டும் என்று அமைச்சர்களில் பலர் கருதுகின்றனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

## ஈழத் தமிழர் குழுக்கள் கனடாவில் மோதல்!

### இருவர் சூட்டுக்குப் பலி!!

றொறன்ரோ,நவ.5

கனடாவிலுள்ள றொறன்ரோவின் கிழக்குப் பகுதியான ஸ்ஹுபறோ என்ற இடத்தில் இரு தமிழ் ஆயுத கோஷ்டிகளுக்கிடையில் கடந்த வாரம் இடம்பெற்ற மோதலில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்திவரும் கனேடியப் பொலீஸார் கொல்லப்பட்டவர்களின் பெயர் விவரங்களை விசாரணை முடியும் வரை வெளியிட மறுத்துவிட்டனர். (12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமாணி தெரிவுப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,நவ.5

தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் கல்விமாணிக் கற்கை நெறியைத் தொடர்வதற்காக நடத்தப்படும் புதுமுகத் தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது.

யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மேற்படி பரீட்சை ஏற்கனவே நடத்தி முடிக்கப்பட்டுவிட்டதை அமைச்சரும் ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தேசிய கல்வி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணவர்த்தனாவுக்கு எடுத்துக் கூறியதை அடுத்து உடனடியாக பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த அவர் இணக்கம் தெரிவித்துள்ளதாக ஈ.பி.டி.பி அமைப்பு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கான கற்கை நெறிகள் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளன என்றும் -

பரீட்சைக்குரிய வினாத்தாள்களை யாழ்.மாவட்ட மேலதிகக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை கொழும்பில் இருந்து எடுத்து வரவுள்ளார் என்றும் -

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


**சிக்கன கடன் வழங்கும்**
**கூட்டுறவுச் சங்கம், சங்கானை பிராந்திய சபை**
**அங்கத்தவர்களுக்கான நீர் இறைக்கும் இயந்திரம்**

## ஏல விற்பனை

சங்கானைப் பிராந்திய சிக்கன கடன் வழங்கும் சங்கங்களின் பாவனையில் உள்ள நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூன்று (03) சங்கானை பிராந்திய சபையால் எதிர்வரும் 11.11.2000 சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு வட்டு.மூளாய் றோட் ஐக்கிய நாணய சங்கக் காரியாலயத்தில் ஏலத்தில் விற்கப்படும்.

*குறிப்பு:-* **நீர் இறைக்கும் இயந்திரங்கள் 10.11.2000 மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணி வரை வட்டு.மூளாய் றோட், ஐக்கிய நாணய சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.**

**செயலாளர்,**
*சங்கானை பிராந்திய சபை.*

(C/13704)



**The 49 th Annual Festival**
**of**
**Carol Singing**
**by**
**the youth**
**of the**
**North**
**at**
**Ottley Hall**
**Jaffna College, Vaddukoddai**
**on**
**Saturday 11th November 2000**
**at 10.00 a.m.**

**ADMISSION BY PROGRAMME: Rs.10/=**

(80153)



## மக்கள் ஆவண கணனிப் பெட்டகம்
## Peoples' Document Data Bank

(1) அடையாள அட்டையைத் தொலைத்துவிட்டு இலக்கத்திற்கும் வழங்கிய திகதிக்கும் அவஸ்தைப்படுகின்றீர்களா?
(2) பிறப்பு, திருமணப் பதிவுப் பிரதி எடுக்க சிரமப்படுகின்றீர்களா?
(3) மாணவர்களே உங்களின் G.C.E. (O/L), G.C.E.(A/L) சுட்டெண்களை , பெறுபேறுகளை ஞாபகம் வைத்திருக்க இயலாதல்லவா?
(4) வங்கி சேமிப்புப் புத்தகம், வைப்புச் சான்றிதழ் கைநழுவ விடப்பட்டுள்ளதா?
(5) ஈட்டு உறுதி, சீதன உறுதி, நன்கொடை உறுதி இலககங்களை நினைவில் வைத்திருக்க முடியாதல்லவா?

ஓம் ஓம் ஓம்

★ யாவற்றையும் நாம் எந்நேரமும் ஒரு நொடியில் இலவசமாக உங்களுக்குத் தருகிறோம்.

★ இன்றே எமது கணனிப் பெட்டகத்தில் பதிந்து கொள்ளுங்கள்

★ பதிவுக் கட்டணம் ரூபா 30/= மட்டுமே

★ நீங்கள் விரும்பினால்

i) மேலும் தரவுகளைப் பதிய இயலும்.
ii) Floppy Disk இல் பதிந்து உங்கள் கையில் தருவோம்.

*சந்தேகம் இருப்பின் தொடர்பு கொள்க.*

மு.தியாகராசா
திட்ட முகாமையாளர்
யாழ்.கணனிக் கல்லூரி (JAFFNA COMPUTER COLLEGE)
(குளத்தின் எதிரில்)
பிரதான வீதி, சங்கானை

(80216)


# அரச அதிபர்களை டக்ளஸ் சந்திப்பார்

கொழும்பு,நவ.5

வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் எட்டாம் திகதி வடபகுதி அரச அதிபர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது வடமாகாண அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5-7)


**ஸ்ரீ செல்வா**
**திரையில்**
தினசரி: 10.30 மட்டும்
அர்ஜுன் - அபிராமி,
பிரகாஷ்ராஜ் நடித்த -
**வானவில்**

நேரம் 2.30, மட்டும்
விஜய், சிம்ரன்
நடித்த
**ப்ரியமானவளே**
புதிய வெளியீடு
(CD பிரதி) (80219)



**ராஜா** யாழ்ப்பாணம்
**விஜய், ஜோதிகா,**
**விஜயகுமார்**
மற்றும் பலரின் நடிப்பில்
(C/13648)
**குஷி**
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
நாளை முதல்
**பூமகள் ஊர்வலம்**



**நாகம்ஸ்** சுன்னாகம்
**அஜித்** (இரு வேடம்),
**சிம்ரன், விவேக்** நடித்த
**வாலி**
(c/13672)
(ரீல்ஸ்) காட்சிகள்- 11.00, 2.30 (பு.நே.)



**நல்லூர் ப.நோ.கூ. சங்கம்**
**கடைத் தொகுதிக் கட்டடம் வாடகைக்கு**

**கீழ் மாடிக் கட்டடம் இல. 1.** முற்பணம் ரூபா 150,000/=
வாடகை ரூபா 2,000/=

பெறவிரும்புவோர் 15.11.2000ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

**பொது முகாமையாளர்,**
நல்லூர் ப.நோ.கூ.சங்கம்,
திருநெல்வேலி.

(C/13701)


*பணிக்கெனத் தன்னை அர்ப்பணித்த*

**திரு.மயில்வாகனம் புத்திரசிகாமணி**

(முன்னாள் பிரதம பாதுகாப்பு அதிகாரி, யாழ்.பல்கலைக்கழகம்)
**அவர்கள்**

## இன்று பாராட்டப்படுகிறார்



**1975 ஆம் ஆண்டிலிருந்து 1999 ஜுலை 31ஆம் நாள் வரை யாழ்.பல்கலைக்கழகத்தில் தன்னை ஒரு பாதுகாப்பு அதிகாரியாக இணைத்துக்கொண்டு பணிபுரிந்த இவர்.**

★ விவேகம் நிறைந்தவர்.
★ சுறுசுறுப்பானவர்.
★ பல நற்குணங்கள் நிரம்பியவர்.
★ கண்ணியம், கட்டுப்பாடு, கடமை என்ற கோட்டுக்குள் வாழ்ந்தவர்.
★ இனிய சுபாவத்தவர்.
★ பலராலும் மதிக்கப்பட்டவர்.
★ நன்றிக்கு வித்தானவர்.
★ மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்.
★ பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் நல்வாழ்வுக்கும் உயர்வுக்கும் உழைத்தவர்.

'வாழிய சிறந்து நீங்கள் வானத்தைப் போல நித்தம்
வாழிய நீடு நீங்கள் சூரியக் கதிரே போன்று'

*வாழ்த்துவோர்:-*
**யாழ்.பல்கலைக்கழகப்**
**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.**

(80216)

உ

# வதிரி காளையந்தோட்டம்
# திருவருள்மிகு ஸ்ரீ முத்துக்குமார சுவாமி திருக்கோயில்
# புனராவர்த்தன நவகுண்டபக்ஷ
# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



மூலமூர்த்தி

மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஐப்பசி மாதம் 23ஆம் நாள் (08.11.2000) புதன்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் துவாதசித் திதியும் குரு காலவோரையும் கூடிய காலை 8.55 மணிமுதல் 10.49 மணிவரையுள்ள தனு லக்கின சுப முகூர்த்த வேளையில் முருகப் பெருமானுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடை பெறத் திருவருள் கூடியுள்ளது.

**கிரியாரம்பம்:-**

**நாளை (06.11.2000) திங்கட்கிழமை காலை 6.04 மணிக்கு.**

**07.11.2000 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிமுதல் முருகப் பெருமானுக்கு பால் காப்பும் ஏனைய மூர்த்திகளுக்கு எண்ணெய்க்காப்பும்.**

**08.11.2000 புதன்கிழமை காலை 8.55 மணி முதல் ஸ்தூபி அபிஷேகம், மஹா கும்பாபிஷேகம், மாலை திருக்கல்யாணமும் உற்சவமும் நடைபெறும்.**

*காளையந்தோட்டம்,*
*வதிரி, கரவெட்டி.*

இங்ஙனம்
**ஆலய அறங்காவல் குழு.**

(79866)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## எதிர்பார்த்த செய்தி அது!

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுடன் இம்மாதம் முதலாம் திகதி முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார்.

இலங்கையின் அரசியலில் ஒரு திருப்பு முனையாக அமைந்த அந்தச் சந்திப்புக் குறித்த செய்தி உரிய முக்கியத்துவத்துடன் உதயனிலும் வெளியிடப்பட்டது. அச்செய்தி வெளியான அன்று சந்தித்த மூத்தவரும் அறிஞருமான ஒருவர், தொடுத்த வினா, குடாநாட்டுத் தமிழ் மக்களின் உள்மனமாக ஒலித்தது.

நோர்வே தூதுவர் — பிரபாகரன் சந்திப்பை எதிர்த்துத் தென்னிலங்கைப் பௌத்த பிக்குகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் — என்ற செய்தி உதயனில் நாளைக்கா அல்லது நாளை மறுதினமா வெளிவரும் என்பதே அந்த வினா!

நீங்கள் குறிப்பிட்ட நாள்களில் ஒன்றில் அந்தச் செய்தி வந்துவிடும்; காத்திருங்கள் என்பது பதிலாக அமைந்தது அந்த மூத்த அறிஞர் எதிர்பார்த்த எதிர்ப்புச் செய்தி வேறு திசையிலிருந்து வந்து நேற்று பிரசுரமானது வாசகர்கள் அறிந்ததே.

ஆம். பௌத்தகுருமார்களையும் தெற்கின் ஏனைய பேரினவாத அமைப்புகளையும் முந்திக்கொண்டு தெற்கின் மூன்றாவது அரசியல் அணியாக முகிழ்த்துள்ள ஜே. வி. பி. (மக்கள் விடுதலை முன்னணி) கர்ண கடூரமாகக் கர்ச்சித்துள்ளது!

புலிகள்–நோர்வேப் பேச்சை நிறுத்துமாறுமுதலாவதுஎதிர்ப்புக்குரலை ஒலித்துள்ளது; அரசாங்கத்துக்கு அவசர கோரிக்கை விடுத்திருக்கிறது. அரசுக்கு எச்சரிக்கை வேறு விடுத்திருக்கிறது.

இலங்கை இனப் பிரச்சினை உள் விவகாரம். அதில் வெளிநாடுகள் தலையிட வேண்டியதில்லை— தலையிடக் கூடாது. சமாதானம் என்ற பின்னணியில் வெளிநாடுகள் தலையிடுவதால் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினை மேலும் சிக்கலாகும். நோர்வேயும் அமெரிக்காவின் வால் பிடிக்கும் நாடு — என்பன ஜே. வி. பியின் வாதங்களாக உள்ளன

தமிழ் மக்களுக்கு உரிய பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக அவர்கள் மீது அராஜகமும் அரச பயங்கரவாதமும் என்று கட்டவிழ்த்து விடப்பட்டதோ 'அன்றே' இனப் பிரசினை உள்நாட்டு விவகாரம் என்ற நிலையைக் கட்டுமீறிவிட்டது.

தமிழர்களுக்குரிய — ஜனநாயக வரம்புக்குள்ளான — உரிமைகளை வழங்குவதற்குத் தென்னிலங்கை அரசுகள் கடந்த 45 வருடங்களாகத் தவறிவிட்டன. இரண்டு தரப்புகளும் பேசித் தீர்வு ஒன்றை காணக்கூடிய சந்தர்ப்பங்கள் பலவும் பெரும்பான்மையினர் என்ற திமிருடன் கைநழுவ விடப்பட்டன. தென்னிலங்கைத் தலைவர்கள் எவருமே நீதி வழங்குவார்கள் என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்கள் இழந்துவிட்டார்கள். மூன்றாந் தரப்பு இல்லாவிடில் அரை குறைத் தீர்வு தம்மீது திணிக்கப்படும் என்ற அச்சமே தமிழர் மனங்களில் நிறைந்துள்ளது.

இத்தகைய பின்னணியில், சமாதான முயற்சிகளைக் கெடுத்துவிடும் போக்குத் தொடர்வது நாட்டு நலனுக்குத் தீங்கு விளைக்கும் என்பதனை ஜே. வி. பியும் ஏனைய தரப்புகளும் எப்போது உணரப் போகின்றன?

# தாய் உன்னைத் தேற்றுவதுபோல தேற்றுவதற்குக் கர்த்தர் வருகிறார்

''ஒருவனை அவன்தாய் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்''

(ஏசாயா 66: 13).

தாயினுடைய அன்பு எவ்வளவு விசேஷமானது! இந்த உலக வாழ்க்கையில் ஒரு மனிதன் பெறும் பெரும் பாக்கியங்களில் ஒன்று தாயின் அன்பேயாகும்! வியாதி நேரங்களில் தாயின் மடியில் தேற்றப்படுவதும் பயத்தின் நேரங்களில் தாயைக் கட்டிப்பிடித்துக் கொண்டு இருப்பதும் பிள்ளைகளுக்கு எத்தனை பாக்கியமானது.

தாய் எப்பொழுதும் தன் பிள்ளைகளைத் தேற்றுகின்றாள்; எப்போதும் அரவணைத்து ஆறுதல் சொல்கிறாள்; தன் பிள்ளைகளுக்காக எந்தத் தியாகமும் செய்ய அவள் ஆவலோடிருக்கிறாள்.

தகப்பனும், தாயும், வம்ச வரலாறும் இல்லாத நித்திய ஜீவனாகிய கர்த்தர் இந்தப் பூமியில் பிறந்த போது அவர் ஒரு தாயின் அன்பை ருசிபார்த்தாரல்லவா! தாயின் மடியிலே வளர்க்கப்பட்டார். அந்தத் தாய் சிலுவைவரை வந்து அவரைக் கண்ணீரோடு பிதாவிடத்திற்கு வழியனுப்பினாள்.

அன்பான சகோதரனே, சகோதரியே, உன்னைத் தேற்றுவார் யாருமில்லையா? அன்பு செலுத்துவார் யாருமில்லையா? ஏரேமியாவைப் போல ''தேற்றுவார் இல்லைக் கர்த்தாவே. என் சிறுமையைப் பாரும்'' (புலம்பல் 1:9) என்று புலம்புகிறாயா? தாவீதைப்போல ''தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன். ஒருவனையும் காணேன்'' என்று அங்கலாய்க்கிறாயா?

கலங்காதே! கர்த்தர் இதோ உன்னண்டை இப்பொழுதே வருகிறார். நான் உன்னைத் தாய் தேற்று

**ஞாயிறு நற்பிரசாதம்**

வதைப் போல தேற்றுவேன் என்று வாக்களிக்கிறார். அவரது மார்பினில் சாய்ந்து கொள்வாயா? இதோ தன் பொற்கரத்தால் உன் கண்ணீர் யாவையும் துடைப்பார் அதுமட்டுமல்ல, பரிசுத்த ஆவியானவரானதேற்றரவாளனையும் உனக்குத் தந்தருள்வார்

தாய் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை! தகப்பனும் தாயும் கைவிட்டாலும் நான் உன்னைக் கைவிடுவதில்லை என்று எத்தனை அன்போடு நம்மைத் தேற்றுகின்றார்.

''ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை'' (ஏசா 49:15)

நம்முடைய தாழ்விலே கர்த்தர் நம்மை மறந்துவிடவில்லை. தாவீது சொல்கிறார் ''நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரை துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது'' (சங் 136: 23)

பிரியமான தேவனுடைய பிள்ளையே, உன் சிறுமையை அவர் மறப்பதில்லை! கர்ச்சிக்கிற சிங்கங்களின் மத்தியில் நீ நின்று அனுபவிக்கும் பாடுகளை அவர் மறந்துவிடவில்லை! உன் குடும்பத்திலே அன்னியனைப் போல தவிப்பதை அவர் காணாவில்லை! சிங்கங்களின் கெபியிலே தானியேலைக் காத்த தேவன், அநியாயமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட யோசேப்பைபாடிருந்து காப்பாற்றிய தேவன் இன்று உன்னோடும் இருக்கிறார். தேற்றிவழிநடத்துவார்.

ஆமென்

-'அருள்மருமகள்'

## சூரன் போரில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 5

மாதகல், நுணசை முருகன் கோயிலில் நடைபெற்ற சூரன் போரில் சூரனின் தலையை ஆட்டிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் சூரனின் தலையுடன் விழுந்து படுகாயம் அடைந்தார்.

இதே இடத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் புருஷோத்தமன் (வயது- 23) என்ற இந்த இளைஞர் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-ரி-5-10)

## மெய்வல்லுநர் போட்டி

சங்கானை, நவ. 5

பனிப்புலம் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பனிப்புலம் அம்மன் ஆலயத்துக்குச் சமீபமாக உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுக் கழகத்தலைவர் ச. ஜோர்ஜ் பாஸ்கரன் தலைமையில நடைபெறும் இந்த நிகழ்வில் பனிப்புலம் கிராம உத்தியோகத்தர் எஸ். ஜீவராசா பிரதம விருந்தினராகவும், சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலய அதிபர் ந பாலச்சந்திரன், பண்ணாகம் வடக்கு அ. மி. த. க. பாடசாலை அதிபர் க. இரட்ணேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்

(இ-7-29)

## கிராம அலுவலர் தலைமையிலான குழுவினர் கசிப்பு வேட்டை

### திருநெல்வேலியில் திடீர் சோதனை

திருநெல்வேலிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டிருந்த சிலரின் வீடுகளுக்குச் சென்ற கிராம அலுவலர் தலைமையிலான குழு ஒன்று அவற்றைப் பறிமுதல் செய்தது.

கடந்த மாதம் 25ஆம் திகதி கிராம சேவை அலுவலர் கே. நித்தியானந்தன் மற்றும் பாரதி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரே மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது 350 லீற்றர் கோடா, 26 லீற்றர் மதுசாரம் மற்றும் கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் என்பன இவர்களால் பறிமுதல் செய்யப்பட்டு எடுத்து வரப்பட்டன.

16 பேரின் வீடுகளில் மேற்படி குழுவினர் மேற்கொண்ட தேடுதலின்போது கைப்பற்றப்பட்ட பொருள்கள் மற்றும் உபகரணங்கள் கிராம சேவை அலுவலரின் பொறுப்பில் உள்ளன.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இப் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுவோர்மீது எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சனசமூக நிலைய உறுப்பினர்கள்தெரிவித்தனர்.

( ஐ — 10 )

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட கலந்துரையாடல் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் நடைபெறவுளளது.

நாட்டில் சமாதான முயற்சிக்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்குமாறு மதத்தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மனித நேய அமைப்புக்கள் ஒன்றிணைந்து மகஜர் தயாரிக்க உள்ளதால் ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகம் தந்து தமது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு செயலாளர் கேட்டுள்ளார்.

(இ-10)

## நாளை

**ஐப்பசி 21**

**திங்கட்கிழமை**

திதி: தசமி

பின்னிரவு 3.53 வரை.

நட்சத்திரம்: சதயம்

பின்னிரவு 2.30 வரை.

சுபநேரம்: 12.05 — 1.35

ராகுகாலம்: 7 35 9 05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நிதிவழங்கி இருவருடங்களாகியும் நல்லின ஆடு வந்துசேரவில்லை

யாழ்ப்பாணம். நவ. 5

நல்லின ஆடுகள் கொள்வனவு செய்வதற்கு என ஐ நா. அபிவிருத்தித் திட்டத்தினால் கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துக்கு நிதி வழங்கப்பட்டு இரண்டு வருடங்களாகியும் இதுவரையும் ஆடுகள் வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் புனர்வாழ்வு, புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் நல்லின ஆடுகள் உற்பத்திக்கென 1998 ஆம் ஆண்டு 37 லட்சம் ரூபா ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் ஒதுக்கப்பட்டு குறிப்பிட்ட திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்தத் திணைக்களம் கொழும்பிலுள்ள தமது அமைச்சின் ஊடாக ஆடுகளைப்பெறுவதற்கென அமைச்சிடம் இந்நிதியினை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் இருந்து நல்லின ஆடுகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதும் யாழ்ப்பாணத்துக்கு இதுவரையும் ஆடுகள் வந்து சேரவில்லை.

இந்த விடயம் தொடர்பாக யாழ் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் பிரஸ்தாபிக்கப்பட்ட போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இரண்டு வருடமாக ஆடுகள் வந்து சேராதகாரணத்தினால் விசனமடைந்துள்ள ஐ நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் குறிப்பிட்ட 37 லட்சம் ரூபாவையும் மீள ஒப்படைக்குமாறு வலியுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)

## தாக்குதல்

மலையகத்தில இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக விவரங்களைச் சேகரிக்கச்சென்ற செய்தியாளர்களின் வாகனம் ஒன்று ராகலவில் வைத்து இனந்தெரியாத குழுவினால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ராகல பொலீஸார் விசாரணை மேற் கொண்டுள்ளனர்.

(இ-3)

## மற்றொரு தொகுதி வர்த்தகர்கள் நாளை சாவகச்சேரிக்கு

தென்மராட்சி, நவ. 5

சாவகச்சேரி வணிகர் மன்றத்தினரால் கடந்த 28 ஆம் திகதி சாவகச்சேரிக்கு வர்த்தகர்களை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப் பட்டு தவிர்க்க முடியாத காரணத்தினால் பின் போடப்பட்ட 13 ஆம் கட்ட பயண ஒழுங்குகள் நாளை திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகுமெனவும்—

கடந்த 28 ஆம் திகதி வர்த்தக நிலையங்களில் இருந்து பொருள்களை மீட்டு வர அழைத்துச் செல்லப்படவிருந்த வர்த்தகர்கள் நாளை அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இதுவரை 12 கட்டங்களில் 150 வர்த்தகர்கள் சாவகச்சேரிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அடுத்தடுத்த கட்டங்களில் மேலும் பல வர்த்தகர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்றும்—

இதுவரை வர்த்தக நிலையங்களைப் பார்வையிடவும் பொருள்களை மீட்டு வரவும் பதிவு செய்யாத வணிகர் மன்ற அங்கத்தவர்கள் நெல்லியடி அஞ்சல் அலுவலகத்துக்கு அருகில் இயங்கும் மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் — மன்ற நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

வணிகர் மன்றத்தில் 403 வர்த்தகர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-117)

### உதயவாக்கு

உயிர்வாழும் பகைவனுக்குப் பயந்து ஓடுவதோ, இறந்துபட்ட பகைவனைப் பழித்துத் தூற்றுவதோ கோழைத்தனமாகும்.

— [illegible]

## பயிற்சிப் பட்டறை

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் வீட்டுத் திட்ட பயனாளிகளக இருந்தவர்களுக்கு ஜீ ரீ. சற் நிறுவனத்தின் பயிறசிப் பட்டறை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9. 00 மணியளவில் கரணவாயில் அமைந்துள்ள கமக்காரர் இளைப்பாற்று மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப் பயிற்சிப் பட்டறையில் வீட்டுத்திட்ட குழுத் தலைவர்களையும், பயிற்சித் தொண்டர்களையும் கலந்து கொள்ளுமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (117.3

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்

# 2001 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம்31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்குகேள்விகள் 2000-11-17ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, தலைமை அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்று பி. ப. 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்களைப் பிரதேச சபையின் உப அலுவலகங்களில் இதன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டவாறு கேள்வி வைப்புப் பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் மூலம் 2000-11-16 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைத் தவறாது கொண்டு வருதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் இரு பிரதிகளை ''தலைவர், வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, தலைமைச் செயலகம், மானிப்பாய்'' என முகவரியிடப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கெனத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'' என முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும். எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சபைத் தலைவருக்குப் பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

பொதுச் சந்தையில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான உட்புற, வெளிப்புறக் கடைகளில் மரக்கறி, மீன், இறைச்சி, கருவாடு போன்ற பொருள்கள் விற்க அனுமதிக்கப்படமாட்டாது. அத்துடன் பொதுச் சந்தை அமைந்துள்ள இடத்திலிருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் மேற்படி வியாபாரம் அனுமதிக்கப்படமாட்டாது. இளவாலை மாட்டிறைச்சிக் கடைக்கு விண்ணப்பிப்பவர்கள் தாங்களாகவே இடத்தைத் தெரிவு செய்து கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட காணி உரிமையாளரின் சம்மதக் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும் சென்ற ஆண்டு (2000) இருந்த இடத்தில் இருத்தல் வேண்டும்.

தற்பொழுது குத்தகை/வாடகை நிலுவைப்பணம் செலுத்த வேண்டியவர்களும் ஏற்கனவே தவறுநர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களும் கேள்விப் படிவம் பெற அருகதையற்றவர்களாவார்கள். மேலதிக விவரங்களை வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய் தலைமை அலுவலகத்திலும், மற்றைய உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், (ஜே. பி. யூ. எம்.)
தலைவர்,
வலி. தென்மேற்குப் பிரதேச சபை.

வலி. தென்மேற்குப் பிரதேச சபை,
மானிப்பாய். 2000—11—03

## அட்டவணை

| உப அலுவலகம் | | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|---|
| 01. மானிப்பாய் பட்டினம் | 01) | ஆட்டிறைச்சிக்கடை (சந்தை) | 250/- | 1,500/- | 300/- | 40,000/- |
| | 02) | மாட்டிறைச்சிக் கடை — இல. 01 (சந்தை) | 250/- | 1,500/- | 300/- | 200,000/- |
| | 03) | கருவாட்டுக் கடை | 100/- | 1,000/- | 300/- | 3,000/- |
| | 04) | மானிப்பாய் பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 1,500/- | 300/- | 500,000/- |
| 02. மானிப்பாய் கிராமம் | 01) | காக்கை தீவுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 1,500/- | 300/- | 20,000/- |
| | 02) | நவாலி பிரசாத் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 1,500/- | 300/- | 100,000/- |
| | 03) | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 250/- | 1,500/- | 300/- | 40,000/- |
| | 04) | நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக் கடை) | 250/- | 1,500/- | 300/- | 23,000/- |
| | 05) | சாவற்கட்டுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 1,500/- | 300/- | 50,000/- |
| | 06) | சாவற்கட்டுச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 1,500/- | 300/- | 8,000/- |
| | 07) | சாவற்கட்டுச் சந்தை கருவாட்டுக் கடை | 100/- | 1,000/- | 300/- | 3,000/- |
| 03. பண்டத்தரிப்பு கிராமம் | 01) | மாசியப்பிட்டி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 1,500/- | 300/- | 75,000/- |
| | 02) | இளவாலை பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 1,500/- | 300/- | 25,000/- |
| | 03) | மாசியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 250/- | 1,500/- | 300/- | 25,000/- |
| | 04) | மாசியப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 1,500/- | 300/- | 10,000/- |
| | 05) | இளவாலைச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | — | 1,500/- | 300/- | 15,000/- |
| 04. பண்டத்தரிப்பு பட்டினம் | 01) | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 1,500/- | 300/- | 175,000/- |
| | 02) | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கருவாட்டுக் கடை இல. 01 | 250/- | 1,500/- | 300/- | 10,000/- |
| | | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கருவாட்டுக் கடை இல. 02 | 250/- | 1,500/- | 300/- | 10,000/- |
| | 03) | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 1,500/- | 300/- | 15,000/- |
| | 04) | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 250/- | 1,500/- | 300/- | 40,000/- |

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்
(ஜே. பி. யூ. எம்.)
தலைவர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை.

வலி. தென்மேற்குப் பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
நகர மண்டபம், மானிப்பாய்.
2000—11 03

[சி/13690]

## விரிவுரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ். பல்கலைக்கழகத்தின் 1999—2000 கல்வியாண்டில் சித்த மருத்துவத் துறைக்கு புதிய அனுமதி பெற்ற மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக்கழக நூல் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள மாணவர் நிலையத்தில் ஆரம்பமாகும் என்று பதிவாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)

## அஞ்சலகம் இடமாற்றம்

தென்மராட்சி, நவ. 5

கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் இயங்கிய விடத்தற்பளை உப அஞ்சல் அலுவலகம், முகமாலை உப அஞ்சல் அலுவலகம் ஆகியவை கடந்த வாரம் முதல் இடம் மாற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடத்தற்பளை உப அஞ்சல் அலுவலகம் கோயில் சந்தைக்கு அருகிலும், முகமாலை உப அஞ்சல் அலுவலகம் கரவெட்டி புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு முன்பாக உள்ள தனியார் வீட்டிலும் இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ — 117)

## வீதி திருத்தம்

வடமராட்சி, நவ. 5

துன்னாலை வடக்கு, மாய்க்கிரான் தயானந்தன் வீதி சுமார் 50 வருடங்களின்பின்னர் மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச சபை இவ் வீதியைப் புனரமைத்துள்ளது.

(ஐ-173)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இலக்கம் 280, பலாலி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் உள்ள இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்குபற்றவுள்ளதால் சகல சங்கங்களின் தலைவர்கள் மற்றும் முகாமையாளர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் கேட்டுள்ளார்.

(ஐ-10)

## நிவாரண அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், நவ. 5

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தற்காலிகமாக வசித்துவரும் குடும்பங்களுக்கான நவம்பர் மாத உலர் உணவு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட உள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பகுதியில் — தங்கியுள்ள குடும்பங்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமையும்,

கரவெட்டிப் பிரதேச செயலர் பகுதியில் தங்கியுள்ள குடும்பங்கள் 11 ஆம், 12 ஆம் திகதிகளிலும் —

குடும்பத் தலைவர்கள் சமுகமளித்து தங்களுக்குரிய உலர் உணவு அனுமதிப் பத்திரங்களை பருத்தித்துறை கிராமக் கோட்டுச்சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் திரு. த. புத்திசிகாமணி தெரிவித்துள்ளார்.

(ஐ-117-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

★ குறிப்பு: இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| 03.11.2000 (வெள்ளிக்கிழமை) வரை கிடைத்த நிதி:- | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - 308,208 |
| 1. அமரர் அ.சின்னத்தம்பி ஞாபகார்த்தமாக, வடலியடைப்பு. | - 1,000 |
| 2. ஓர் அன்பர், வடலியடைப்பு. | - 100 |
| 3. ஓர் அன்பர், சுதுமலை. | - 250 |
| 4. அஞ்சலோ பத்திரிகை முகவர், ஊர்காவற்றுறை. | - 1,000 |
| 5. ஆர்.ரகுபதி, யாழ்ப்பாணம். | - 1,200 |
| 6. திருமதி யோகநாதன், சரசாலை. | - 500 |
| 7. ஓர் அன்பர் | - 500 |
| 8. அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் முத்துத்தம்பி மகா வித்தியாலயம், திருநெல்வேலி. | - 2,700 |
| 9. ஓர் அன்பர், அளவெட்டி. | - 100 |
| 10. ஓர் அன்பர், கந்தரோடை. | - 500 |
| 11. வி.தங்கராசா, அல்லையம்பதி, கரவெட்டி | - 200 |
| 12. எப்.ஆர்.டீன், பழையபூங்கா வீதி. | - 201 |
| 13. ஆர்.கீதபொன்கலன், பழையபூங்கா வீதி. | - 201 |
| 14. ஏ.யேக்கப், பழையபூங்கா வீதி. | - 505 |
| 15. கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம், நல்லூர்க் கிளை. | - 5,000 |
| 16. டாக்டர் சிதம்பரநாதன் முகுந்தன், அத்தியடி, யாழ்ப்பாணம். | - 1,500 |
| 17. செல்வி மி.கந்தசாமி, யாழ்ப்பாணம். | - 200 |
| 18. திருமதி எஸ்.மனோகரன், ஆர்க் வீதி, உடுவில் | - 200 |
| 19. செல்வி எஸ்.கனகசபை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். | - 200 |
| 20. செல்வி எஸ்.தமயந்தி, சுன்னாகம் கிழக்கு. | - 200 |
| 21. செல்வி ந.பிருந்தா, மந்திகை, புலோலி. | - 200 |
| 22. செல்வி க.வானதி, யாழ்.பல்கலைக்கழகம். | - 200 |
| 23. சி.இராஜேஸ்வரன், கரணவாய், கரவெட்டி. | - 200 |
| 24. நாகராசா, சுழிபுரம். | - 200 |
| 25. அ.கணேசமூர்த்தி, நீதிமன்ற வீதி, மல்லாகம். | - 200 |
| 26. இ.லோகநாதன், குப்பிளான். | - 200 |
| 27. க.யோகராசா, அல்வாய் கிழக்கு. | - 200 |
| 28. க.செல்வம், கோப்பாய் தெற்கு. | - 200 |
| 29. அ.க.நடராஜா, செட்டித்தெரு, நல்லூர். | - 500 |
| 30. அதிபர், ஆசிரியர்கள், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம். | - 1,151 |
| 31. செ.வித்தகன், நல்லூர், யாழ்ப்பாணம். | - 250 |
| 32. பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை. | - 3,585 |
| 33. இன்றறக்ட் கழகம், கொக்குவில் இந்துக்கல்லூரி. | - 1,135 |
| 34. ஓர் அன்புத்தாய், உரும்பிராய் | - 500 |
| 35. கே.வி.மயில்வாகனம், கைதடி. | - 100 |
| 36. திருமதி அன்னபூரணம் இரத்தினசிங்கம் நினைவாக | - 2,000 |
| 37. மண்டைதீவு மகாவித்தியாலயம். | - 502 |
| 38. செ.சிதம்பரநாதன், தும்பளை, பருத்தித்துறை. | - 1,000 |
| 39. ஆசிரியர் மன்றம், உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை. | - 1,500 |
| 40. கே.ஜெயரட்ணம், நல்லூர், யாழ்ப்பாணம். | - 500 |
| 41. பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பழைய மாணவன் | - 1,000 |
| 42. ஓர் அன்பர், யாழ்.செயலகம். | - 500 |
| 43. மகாஜனக் கல்லூரிச் சமூகம், தெல்லிப்பழை. | - 2,239 |
| 44. ஓர் அன்பர், மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை | - 250 |
| 45. ரி.நாகராசா, கொக்குவில். | - 500 |
| 46. ஆர்.அற்புதநாதன், லோட்டஸ் வீதி, ஆறுகால்மடம். | - 250 |
| 47. சித்தமருத்துவ மாணவர் ஒன்றியமும் விரிவுரையாளர்களும், கல்விசாரா உத்தியோகத்தர்களும், சித்த மருத்துவத்துறை (யாழ்.பல்கலைக்கழகம்) | - 5,570 |
| மொத்தம் | 349,097 |

# தமிழர்களின் உள்ளமும் எண்ணமும்

★விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்லாமல், எல்லாத் தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்.

★விடுதலைப் புலிகளின் பங்களிப்பின்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. ஐ.தே.கட்சியுடனும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் கலந்து பேசி நாம் தயாரிக்கும் தீர்வுத் திட்டம், விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கும் அனுப்பி வைக்கப்படும்.

★இது தமிழர்களுக்கு எதிரான யுத்தம் அல்ல. விடுலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம். யுத்தத்தின் மூலம் புலிகளை வலுவிழக்கச் செய்தால்தான், அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள்.

★புலிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும்; வன்முறையைக் கைவிடுவதாக வாக்குறுதி அளிக்க வேண்டும். அதற்குப் பின்னர்தான் அவர்களுடன் இனப் பிரச்சினை பற்றி அரசு பேசும்.

★தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவதாகப் புலிகள் பகிரங்கமாக அறிவித்ததன் பின்னரே அவர்களுடன் நாம் பேசுவோம்.

★புலிகளுடன் போரை நடத்திக் கொண்டு, சமாதானப் பேச்சு வார்த்தைகளையும் மேற்கொள்வோம். யுத்த நிறுத்தம் அவசியமில்லை.

★எமது தீர்வுத் திட்டத்தைப் புலிகளும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, நிறைவேற்றப்படும்.

★நாடாளுமன்றம் தீர்வுத் திட்டத்தை நிராகரித்தால் வேறு வழியில் அதை நடைமுறைப்படுத்துவோம்.

★நாள்தோறும் கோடிக்கணக்கான பணத்தை விழுங்கும் அர்த்தமற்ற இந்தப் போர் நிறுத்தப்படவேண்டும். இதன்மூலம் சேமிக்கப்படும் பணம், நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

இனப் பிரச்சினை சம்பந்தமாக ஜனாதிபதி சந்திரிகா இந்நாட்டு மக்களுக்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களிற் கூறிய வார்த்தைகள் - கொடுத்த வாக்குறுதிகள் - இவை.

நாட்டிலே போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துவதே என்னுடைய நோக்கம். போரை நிறுத்துவதற்கும் இனப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கும் விடுதலைப் புலிகளுடன் பேசுவேன்; பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால், மனம் தளராது மீண்டும் அவர்களுடன் பேசுவேன்; மீண்டும் தோல்வி அடைந்தால் மீண்டும் மீண்டும பேசி நல்ல முடிவைக் காண்பேன். போரை நிறுத்துவதும், அப்பாவி மக்கள் அநியாயமாகச் சாவதைத் தடுப்பதுமே என்னுடைய முதற் பணியாக இருக்கும் எனத் தெளிவாகவும் ஒளிவு மறைவு இன்றியும் பிரசாரம் செய்து 1994இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரிகா, பதவியில் தன்னை நன்கு உறுதிப்படுத்திக் கொண்டபின் எடுத்த நிலைப்பாடுகளே மேலே நட்சத்திரக் குறிகளால் காட்டப்பட்டவை.

இவற்றையும் -

நாட்டின் சகல வளங்களையும் பயன்படுத்தி, விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதே எமது நோக்கம். பழைய தீர்வுத் திட்டத்தை மீண்டும் கொண்டுவர மாட்டோம். மகாநாயக்கர்களின் ஆலோசனைகளைப் பெற்றுப் புதிய திட்டத்தை உருவாக்குவோம் -

என்ற புதிய பிரதமரின் தற்காலப் பேச்சுக்களையும் -

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்; இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனக்கூறும் அதே வேளை ஒற்றையாட்சி முறை ஒழிப்பு வடக்கு-கிழக்கு இணைப்பு சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சி கடும் போக்கைக் கடைப்பிடிப்பதையும் -

பேரினவாதக் கொள்கைகளை வெளிப்படையாகவே பரப்பிவரும் சிஹல உறுமய, வீரவிதான, பூமிபுத்ர போன்ற கட்சிகளின் தலைவர்களுக்கும் அவர்களின் கருத்துக்களுக்கும் தேசிய ஊடகங்கள் கொடுக்கும் மதிப்பும் முக்கியத்துவமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையும் -

நோக்கும்போது, இனப்பிரச்சினைக்கு நியாயமான, நிரந்தரமான, பாதிக்கப்பட் தமிழர்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்ளக் கூடிய நல்ல தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றது.

இந் நிலையில் -

போரை நிறுத்தி, மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெறச் செய்து இனப் பிரச்சினைக்குக் கௌரவமான தீர்வு ஏற்படுவதற்குப் பாடுபடுவோம -

என்ற வாக்குறுதியுடன் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கைத தமிழ்க் காங்கிரஸ் ஆகியவற்றின் உறுப்பினர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்?

பேரினவாதப் பிசாசு தன்கோரப் பற்களை மீண்டும் கூர்மையாக்கத் தொடங்கியுள்ளதையும், பிளவுபட்டு நிற்கும் தமிழ்ச் சிறுபான்மையினரை விழுங்கி ஏப்பம விடுவதற்கு விரைந்து கொண்டிருப்பதையும் உணர்ந்து -

ஆக்கபூர்வமாகச் சிந்தித்து அர்த்த பூர்வமான நடவடிக்கைகளை நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எடுக்கப் போகின்றார்களா?

அல்லது -

பொறி பறக்கும் அறிக்கைகளை வெளியிடுவதுடன் தமது கடமையும் பொறுப்பும் முடிந்துவிட்டன என்ற நினைப்பில், அரச பாதுகாப்புடன் கொழும்பில அடைந்து கிடக்கப் போகின்றார்களா?

அவர்களுக்குச் சில கடமைகளைக் கூறுவதும் நினைவூட்டுவதும் அவசியம் எனக் கருதுகின்றோம்.

தமிழர்களின் நலன் காக்க உருவாக்கப்பட்ட கட்சிகளின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் என்ற வகையில் பாரிய பொறுப்புக்கள் அவர்களுக்கு உண்டு. சட்ட ரீதியாக, அவர்களின் கருத்துக்களையே தமிழ் மக்களின் கருத்துக்களாக உலகம் கணிக்கப் போகின்றது. யாருக்கும் பயப்படாமல், எவ்வித தயக்கமும் இல்லாமல், தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தெளிவாக-ஐயம் திரிபுக்கிடமின்றி-எடுத்துக் கூறுவதன் மூலம் தமிழ் மக்களின் உள்ளத்தை-எண்ணத்தை-உணர்வை-உணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும்.

## மணிமண்டபம்

சலுகைகளும் சாப்பாடுமல்ல, உரிமைகளும் உறுதியான அதிகாரப் பகிர்வும், சுதந்திரமும் சுய கௌரவமுமே தமிழ் மக்களின் அபிலாஷைகள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

செய்தித் தணிக்கை இன்னமும் நீக்கப்படாத நிலையில் - பண்டாரவளைச் சம்பவம், அடிக்கடி நடைபெறும் தனிமனிதப் படுகொலைகள், காணாமற்போதல், திடீர் கைது போன்றவற்றின் பின்னணிகளை நன்கு ஆராய்ந்து உண்மையை அம்பலப்படுத்துவதுடன், இலங்கைப் பிரச்சினையில் ஏதோ ஒருவகையில் தொடர்புடைய இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளுக்கு நேரடியாக அறிவிக்கவும் வேண்டும்.

நியாயமான மாற்றுத் தீர்வொன்றை அரசு முன் வைத்தால், மூன்றாந் தரப்பின் உதவியுடன் அதைப பரிசீலனை செய்வதற்குத் தயார் என்று விடுதலைப புலிகள் முன்னர் கூறியதைக் கவனத்தில் எடுத்து -

சரியான தீர்வை முன் வைக்காமற் சாக்குப் போக்குச் சொல்வது அரசே என்பதையும் அந்த நாடுகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அதன் மூலம் தீர்வுக்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்குக் கொடுக்கும்படி ஏனைய நாடுகளைத் தூண்ட வேண்டும்.

இவை அனைத்திற்கும் ஆதார சக்தியாக இருக்கும்படி, தம் கட்சி நலனையும் தனி மனித முக்கியத்துவத்தையும் கைவிட்டு, ஒற்றுமையாக ஒரே குழுவாக அவர்கள் செயற்படவேண்டும்.

செய்வார்களா?

**சித்தன்**


**ENGLISH SPOKEN AND GRAMMAR**

**BY: BRITTO**

புதிய பிரிவு

ஆரம்பம்: 08.11.2000

புதன்கிழமை

நேரம்: மாலை 5.00

செவ்வாய், வியாழன்

இடம்: கொக்குவில்

(ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)

(C/13673)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ்.மாவட்ட மக்களின் வளமான வாழ்வுக்கு பல இன்னல்களின் மத்தியிலும் அளப்பரிய பணிகளை ஆற்றிவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலதிபரும், வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ்மொழி விவகார அமைச்சருமான

**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும் அவர்களோடு நாடாளுமன்றம் சென்றிருக்கும் ஏனைய உறுப்பினர்களையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை மக்கள் சார்பிலும், பிரதேச சபை சார்பிலும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள், செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.**

*வலி.கிழக்கு பிரதேசசபை, .*
*தலைமை அலுவலகம்,நீர்வேலி.*

(C/13695)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

இலங்கை அதிபர் சேவையில் தரம் ஒன்றிற்கு பதவி உயர்வு பெற்றுள்ள எமது அதிபர்

**திரு.து.நடராஜலிங்கம** அவர்கள்

மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று, நலமுடன், பல்லாண்டு காலம் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.**

(80[illegible])



**YOGI HOME SCIENCE ACADEMY**

**புதிய வகுப்புகள் ஆரம்பம்**

10-11-2000 முதல் அனைத்து மனையியல் பயிற்சி வகுப்புகளும் ஆரம்பமாக உள்ளன.

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்:-

75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

(வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

(80208)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் கலாசார உத்தியோகத்தர் வகுப்பு II பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2000

வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச்சேவையில் வெற்றிடமாகவுள்ள கலாசார உத்தியோகத்தர் வகுப்பு II பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குக் கீழ் குறிப்பிட்ட தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந் தும் விண்ணப்பங்கள் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வின் செயலாளரினால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2000.12.01 ஆகும்.

02. தற்போது இப்பதவிக்குரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 26 ஆகும். மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை மேற்கூறப்பட்டவாறு இருந்தபோதிலும் ஆள்சேர்க்கும் சந்தர்ப்பத்தில் சேவையின் தேவையைப் பொறுத்து வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவதற்கோ, கூடுவதற்கோ இடமுண்டு. எவ்வாறாயினும் நிரப்பப்படும் வெற்றிட எண்[illegible] தொடர்பான இறுதித் தீர்மானம் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணை[illegible] குரியதாகும்.

03. **சேவைக்கான நிபந்தனைகள்:**
1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள் அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுத் தொகை செலுத்துமாறு வேண்டப்படுவார்கள்.
2. (இது ஓர் இடமாற்றச் சேவையாகும்) இவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கடமைப்பட்டவர்களாவர்.

04. **சம்பள அளவுத்திட்டம்:**
பொது நிர்வாக சுற்றறிக்கை 2/97(iii) இன் படி ரூபா 79,080 - 12x2460 - 108,600 - (T.3.6) வழங்கப்படும்.

05. **தகைமைகள்:**
அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ஆ. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
இ. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 21 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/ மாகாண சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)
ஈ. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாவது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** வடக்கு-கிழக்கு மாகாணத்தினை பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்து வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வசிப்போரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமாக காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. இதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

உ. (i) விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கீழைத்தேச மொழிகள்/வரலாறு/தத்துவவியல்/தொல்பொருள்ஆராய்ச்சியியல்/நாகரிகம்/கல்வி/சமூகவியல்/நாடகமும் அரங்கியலும்/ நுண்கலை ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் விசேட பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது
மேலே தரப்பட்ட பாடங்களில் ஏதாவது இரு பாடங்களைக் கொண்ட பொதுப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது
10 வருட தொடர்ச்சியான சேவையினை கொண்ட பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட பொதுச்சேவை/மாகாண சேவை அலுவலராக இருப்பதுடன் க.பொ.த(உயர்தர) பரீட்சையில் ஒரே தடவையில் இருபாடங்களில் திறமைச்சித்தி அடங்கலாக 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கலாசார வேலைகளில் 05 வருடத்திற்கு குறையாத அனுபவத்தினையும் பெற்றிருத்தல் வேண்டும்.
(ii) தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் சிறந்த அறிவு பெற்றிருத்தல் மேலதிகமான தகைமையாகக் கருதப்படும்.

**குறிப்பு:** இவ் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் உரிய பரீட்சையின் பெறு பேறுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். பெறு பேறுகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நேர்முகப்பரீட்சையில் நிராகரிக்கப்படும்.

06. **ஆள்சேர்ப்பு முறை:** அங்கீகரிக்கப்பட்ட ஆள்சேர்ப்புத் திட்டம், அரச சுற்று நிருபங்களுக்கு அமைவாக எழுத்துப்பரீட்சைப் பெறுபேற்றின் திறமை அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களிடம் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் ரத்துச்செய்யப்படும். எனினும் இந்நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டா.

07. **எழுத்துப் பரீட்சை:** இப்பரீட்சை தமிழ்/சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படும். இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும். இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு:-

1. பொது உளச்சார்பு - ஒரு (01) மணித்தியாலம் - 100 புள்ளிகள் சொற்றொடர்கள், எண்கள் பற்றி உருவ வடிவங்களில் கொடுக்கப்படுகின்ற சிக்கலான விடயத்தில் பரீட்சார்த்திகள் காட்டுகின்ற அனுமானங்கள் மற்றும் பதில்களை ஆதாரமாகக் கொண்டு அப்பிரச்சினைகள் தொடர்பான கருத்துக் கிரகிப்பு அளவீட்டுணர்தல் மற்றும் கால அவகாசங்களுக்கிடையிலான தொடர்புகளை புரிந்து கொள்வதில் பரீட்சார்த்திகளுக்கு இருக்கின்ற திறமையை அளவிடுதல்.
2. பொது அறிவு - இரண்டு (02) மணித்தியாலம் -100 புள்ளிகள் தேசிய பிராந்திய மற்றும் உலகம் பூராகவுள்ள பல தரப்பட்ட அமைப்புச் சுற்றாடல்களிலும் எமது சமூகத்திலும் நிலவுகின்ற சமூக, கலாசார, கல்வ, அரசியல், விஞ்ஞானம், பொருளாதாரம், விளையாட்டு ஆகியவற்றோடு தொடர்புடைய ஏனைய காரணிகள் தொடர்பாகவும் உள்ள பரீட்சார்த்தியின் அறிவையும் தெளிவையும் அளவிடுவதற்காக.

08. **பரீட்சைக் கட்டணம்:** விண்ணப்பதாரி வதியும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200 ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் 6004ஆம் இலக்க வைப்புக் கணக்கின் வரவில் சேரக்கூடியதாக பிரதேசச் செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமான ரூபா 200 ஐச் செயலாளர், மாகாண பொதுசேவை ஆணைக்குழு, வடக்கு-கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற பெயருக்கு காசுக் கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. **விண்ணப்பிக்கும் முறை:** இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கு அமைவாக ஏ4 அளவிலான (21செ.மீX29செ.மீ) தாளில் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 10 வரையுள்ள விவரங்களை அதன் முதற் பக்கத்திலும் எஞ்சிய விவரங்களை இரண்டாம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தினை வடிவமைத்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 2000.12.01 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர். மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, இல.35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவையின் கலாசார உத்தியோகத்தர் வகுப்பு II பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை 2000 என்று பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

எவரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்குத் தமது அனுமதி அட்டை எழுத்துப்பரீட்சைக்கு குறைந்த பட்சம் ஏழு நாள்களுக்கு முன்பாவது கிடைக்காவிடின் அதனைப் பற்றி உடனடியாக மேலே குறிப்பிட்ட முகவரிக்கு அறிவித்தல் வேண்டும். (தந்தி கிடைக்கும் முகவரியும் மேற்குறிப்பிட்ட முகவரியே ஆகும்) அறிவிக்கும்போது பின்வரும் விவரங்களும் குறிப்பிடப்படல் வேண்டும்.
(அ) பரீட்சையின் பெயர்:
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர்:
(இ) முகவரி:
(ஈ) விண்ணப்பம் அனுப்பப்பட்ட முகவரி:
பதிவுத் தபால் இலக்கமும் திகதியும்:

11. இவ்அறிவித்தலில் குறிப்பிட்டட தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் தீர்மானத்திற்கமைய குறிப்பிட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளும், போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். போட்டிப் பரீட்சைக்கு அழைப்பதன் மூலம் விண்ணப்பதாரி இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனர் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

12. பரீட்சை நடத்துவதற்கு உத்திதேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:-

| நகரம் | எண் | நகரம் | எண் |
|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் - | 1 | 6. திருகோணமலை - | 6 |
| 2. மன்னார் - | 2 | 7. மட்டக்களப்பு - | 7 |
| 3. வவுனியா - | 3 | 8. அம்பாறை - | 8 |
| 4. கிளிநொச்சி - | 4 | 9. கல்முனை - | 9 |
| 5. முல்லைத்தீவு - | 5 | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்துக்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறதித்தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**க.சிவசிதம்பரம்**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு-கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

## மாதிரி விண்ணப்பப் படிவம்
## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையின் கலாசார உத்தியோகத்தர் வகுப்பு II பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2000

சுட்டெண் :

(அலுவலக உபயோகத்துக்கு)

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: திரு/திருமதி/செல்வி:-
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:-
தமிழில்:-
ஆங்கிலத்தில்(பெரிய எழுத்துக்களில்) :-

03. தபால் முகவரி :-
தமிழில்:-
ஆங்கிலத்தில்(பெரிய எழுத்துக்களில்):-

04. பால்:- ஆண்:M / பெண்:F

05. பரீட்சைக்குத் தோற்றும் மொழி:-
தமிழ் T / சிங்களம் S

06. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண் :-
(12 ஆவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)

07. இனம்:-
சிங்களவர் - 1
இலங்கைத் தமிழர் - 2
முஸ்லிம் - 3
இந்தியத் தமிழர் - 4
ஏனையவர் - 5

08. நீங்கள் இலங்கைப் பிரஜையா?
வம்சாவளியினாலா/பதிவு செய்யப்பட்டதனாலா என்பதைக் குறிப்பிடுக.

09. விவாகமானவரா/விவாகமாகாதவரா?

10. பிறந்த திகதி: வருடம்: மாதம்: திகதி :
2000.12.01 ம் திகதியன்று வயது:
வருடங்கள்: மாதம்: நாள்கள்:

11. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
(2) பிரதேச செயலாளர் பிரிவு:
(3) வதியும் கால எல்லை: தொடக்கம் வரை
(4) வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின் தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம்:
(5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம்:..............................
மாகாணம்:..............................
இடம்பெயர்ந்த ஆண்டு:.............. மாதம்.............. திகதி..........

12. தகைமைகள்:
12:1கல்வித் தகைமைகள்:
க.பொ.த (உ/த) ஆண்டு: சுட்டெண்:-
பாடங்கள் தரம்
1
2
3
4
பொதுச்சேவையில் நிரந்தர சேவைக் காலமும், கலாசார வேலைகளில் அனுபவமும் பற்றிய விவரம்:

12:2பட்டம் பெற்ற திகதியும் பட்டத்தின் வகையும் :
பல்கலைக்கழகம் :
பாடங்கள்:

12:3மொழி அறிவு பற்றி விவரம்: (7ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் மருந்துத் தட்டுப்பாடு

வவுனியா,நவ.5

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் மருந்துப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

இதனால் வன்னிப் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகள் பலவும் செயலிழக்கும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிய நோய்களுக்கான மருந்துப் பொருள்களைக் கூடப் பெற முடியாத நிலை அங்கு தோன்றியுள்ளதாகவும் -

இதன் காரணமாக மழைக்காலம் நெருங்குவதனால் தொற்று நோய்கள் பலவும் பரவக் கூடிய ஆபத்துக் காணப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஐப்பசி மாதம் 21ஆந் திகதி (06.11.2000)
திங்கட்கிழமை பகல் 12.30 மணிமுதல் 1.30 மணிவரை
வரும் சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன்
**யோகேந்திரன்**
(லலிதா ஜுவலர்ஸ் - யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி
**கௌரி**
(ஆசிரியை)
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் திருமணம் நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் இனிது நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் இஷ்டமித்திர குடும்ப சமேதரராய்ச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம்

**அன்புடன் அழைக்கின்றோம்.**

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

**திரு.திருமதி சா.நாராயணசாமி**
குடும்பத்தினர்,
132, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இரு வீட்டார் அழைப்பு

**திரு.திருமதி க.சச்சிதானந்தன்**
குடும்பத்தினர், 11,அரசடி லேன்,
வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம். (நாவற்குழி)

(80165)


# வடக்கு - கிழக்கு....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

13. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

14. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ................ ............ பிரதேசசெயலகத்தின்.............................. ஆம் இலக்க.............................. ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவர் எனக் கண்டு பிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி : ..............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பப் பத்திரத்தில் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர். பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவிவகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 74,160/= இக்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்படவேண்டும் .

16. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**
விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற வண/திரு/திருமதி/ செல்வி.......................என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும்.............................................. ஆம் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ..............................................

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்
பதவி:
முகவரி:(பதவி முத்திரை)

(வடக்கு -கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்துக்கு இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு)
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக / வதிவிடமாகக் கொண்டவர் என்பதையும், அவர்.......................... திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து ................... மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ..............................................

பிரதேச செயலாளர்/கிராமசேவகர்
கையொப்பம்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

17. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:
இத்திணைக்களத்தின் தற்காலிக/நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வண/திரு/திருமதி/ செல்வி.................... அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன் அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக் காலத்தில் எவ்வித ஒழுக்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ..............................................

திணைக்களத்தலைவரின்
கையொப்பமும் பெயரும்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

(C/13670)


# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




# செல்வி கீர்த்தனா

**கேதீஸ்வரன் - கவிதா தம்பதிகளின்**
**செல்வப் புதல்வி கீர்த்தனா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (05.11.2000) ஞாயிற்றுக்கிழமை 22A, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். கீர்த்தனாவை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மப்பா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, அத்தைமார், மாமாமார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அருளும் நல்லாசியும் பெற்று பண்பின் பிறப்பிடமாய் செல்வச் செழிப்புடன் சகல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
S.சுப்பையா (அப்பப்பா)

*22A, வெள்ளாந் தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(80071)



காலமற்ற காலமதில் காலனுலகடைந்த
செல்வி விஜயரத்தினம் யஜிதா அவர்களின்

# ஆறாம் மாத் விண்ணுலக வாழ்வின்
# நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையவள் பெற்று மகிழ்ந்தது
10 - 01 - 1975



காலனவன் கவர்ந்து மகிழ்ந்தது
12 - 05 - 2000

# செல்வி விஜயரத்தினம் யஜிதா

எம் இதயமெனும் நந்தவனத்தில் பூத்திட்ட நறுமலரே!
நல் மாலையில் சேர்ந்து நீயும் பெருமை பெறுமுன்னே
ஷெல்லது பட்டு நீயும் கருகித்தான் போனதேனோ?
காலனவனுன் னழகில் கண்வைத்துப் பறித்தானோ?
இறைவனவன் பாதமதில் அர்ச்சனை மலராய் பூசிக்க
திருவுலகம் போய் விட்டாய் என்றெண்ணி
அனுதினமும் உனை நினைத்துத் தொழுகின்றோம் நாம்!

15.05.2000 இல் சிவசாரூப்பியப் பேறெய்திய எங்கள் அன்பு மகள் யஜிதா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (5.11.2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந் நிகழ்வுப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**திரு.திருமதி விஜயரத்தினம் நேசமலர் (வவா)**
**குடும்பத்தினர்.**

*கட்டுக்காணி லேன்,*
*சாவகச்சேரி.*

தற்போதைய முகவரி:
*இல.52, கேசாவில் பிள்ளையார் கோயில் வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

(80174)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ரேவதி நட்சத்திரம், 1966ஆம் ஆண்டு பிறந்த, நற்குணமுள்ள, பட்டதாரிஆசிரியைக்கு பெற்றோர் உள்நாட்டில் அரச தொழில் செய்யும், 40 வயதுக்குட்பட்ட, நற்பண்புள்ள மணமகனை எதிர்பார்க்கின்றனர். சகல விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1128, மே/பா.உதயன். (80111)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றம உள்ள 5'3" உயரமான நற்குணம்மிக்க, அழகிய, அரச தொழில் பார்க்கும், பட்டதாரி மணமகளுக்கு உள்நாட்டில் தொழில் புரியும் தகுதியுடைய மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சகல விவரங்களுடன் தொடர்புக்கு: விளம்பர இல.1121, மே/பா உதயன். (79713)

### உடன் விற்பனைக்கு

புதிய நல்ல நிலையிலுள்ள பாவித்த நிலை, ஜன்னல், கதவு, சாப்பாட்டு மேசை, கதிரை (புதியவை) அத்துடன் தீராந்தி, வேம்பு, முதிரை, மவுக்கினி ஆகிய மரங்கள், பலகை அறுக்கக்கூடிய நிலையிலுள்ளவை. சீவுளிப் பட்டறை, கடைச்சல் பட்டறை என்பனவும உடன் விற்பனைக்குண்டு.தொடர்பு: அருந்தவச்செல்வம மங்களகுமாரி, துரை வீதி, இணுவில் தெற்கு, இணுவில். (C/13678)

### நாடகமும் அரங்கியலும்

A/L2001,2002 ஆகிய பிரிவினருக்கு தனியாகவோ, குழுக்களாகவோ கற்பிக்கப்படும். து.துசியந்தன், இல.76, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம். (80179)

### தவறிவிட்டது

02-11-2000ஆம் திகதி 4.30 மணியளவில் பருத்தித்துறை சென்று கொண்டிருந்த மினி பஸ்ஸில் உடுப்பு, புத்தகபார்சல் என்பன தவறவிடப்பட்டன. கண்டெடுத்தவர்கள் மாநகரசபை கணக்குப்பகுதி, யாழ்ப்பாணம என்ற விலாசத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (80191)

கேணியடி கொக்குவில் மேற்கு கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த நடராசா மகாலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (373581852v), வி.அ.அ. இரண்டும் 15-10-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (80196)

பாலசுப்பிரமணியம் கோபிநாத் என்பவருடைய விசேட அடையாள அட்டை நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் கடந்த 15-10-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 235, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரியில் கொடுத்துதவவும். (80193)

முத்தன் மகாலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.552823419v),விசேட அடையாள அட்டை (இல.0904015854) என்பன பொன்னாலை மேற்கு சுழிபுரம் என்னும் இடத்துக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மூளாய் றோட், மூளாய் என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். (80192)

### விற்பனைக்கு

YAMAHA இஞ்சின் 600w உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.சதானந்தன் 5/1, புகையிரத வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (80178)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக் கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 3081. (c/13637)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில, திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி மாலை வகுப்புக்கள நடைபெறுகின்றன.ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். (80176)

### A/L பௌதிகவியல்

பௌதிகவியல் இணைந்த கணிதம் பலவருட அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் முழுப் பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் பயிற்சிகளுடன் சிறப்பாகக் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் பிற்பகல் 3 மணிக்குப் பின்பு சந்திக்கவும். R.பாலசுப்பிரமணியம், B.Sc (Cey.)Dip. in Ed., 17/1,பிறவுண் வீதி யாழ்ப்பாணம். (80207)

### மண[illegible]ள் தேவை

யாழ். இந்து குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் சவூதி அரேபியாவில் (அல்கோபார்) பெரிய நிறுவனம் ஒன்றுக்கு மனேஜராக வேலை பார்க்கும் 75,000/- சம்பளம் பெறும், தமது அழகான, அத்தம் 8 இல் செவ்வாய் பாவம்30 உடைய மணமகனுக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அழகான, படித்த, பண்பான பெண்ணை, எதிர்பார்க்கின்றனர். மணமகனின் வயது 33, உயரம் 5'9". சீதனம் பேசித தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு: விளம்பர இல.1131, மே/பா உதயன். (80205)

## விமானத் தாக்குதல

கொழும்பு,நவ.4

திருகோணமலை மாவட்டம் உப்பாறுப் பகுதியில் கடந்த செவ்வாயன்று நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் 31 பேர் உயிரிழந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலின் போது விடுதலைப்புலிகளின் முகாம்கள் பல அழிக்கப்பட்டன, விடுதலைப்புலிகள் தரப்பில் 52 பேர் காயமடைந்தனர். விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான படகுகள் அழிக்கப்பட்டன- என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ.5

ஹற்றன் நஷனல் வங்கி நடத்தும் புத்தாயிரம் ஆண்டிற்குரிய எச்.என்.பி. வெற்றிக்கேடயத்திற்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு கழகங்களுக்கிடையில் நடைபெறும் ஆட்டத்தில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் ஜொலிஸ் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன. (ஐ-3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் மலர்வு 05 - 09 - 1987



விண்ணுக்குப் பெயர்வு 06 - 10 - 2000

### செல்வன் இராசையா ஜீவகரன்

மழலை மொழி தந்து மகிழ்வு செய்த ஜீவ[illegible]ா,
மலர்முகம் மறைந்து மாதமொன்று ஆனதிங்கே
இழக்கின்ற வயதிதுவோ? எதுவிதத்தில் ஆறுவோம் நாம்?
எம் கனவில் ஆயினும் இனியமுகம் விழிப்பதெப்போ?

உமது பிரிவால் துயரில் மூழ்கும்
- குடும்பத்தினர்.

*கொல்லோலை வீதி,*
*இமையாணன் மேற்கு,*
*உடுப்பிட்டி.*

(79997)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 16 - 07 - 1938



ஆண்டவன் அடியில் 21 - 10 - 1996

### அமரர் கார்த்திகேசு செல்லத்தம்பி

(முன்னாள் ஊழியர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)

*திதி: 05-11-2000*

**அன்பின் அப்பாவே!**
**ஆண்டுகள் நான்காகியும்**
**ஆறவில்லை எம் துயர்**
**காலங்கள் மாறலாம்**
**காட்சிகள் மாறலாம்**
**ஆனால் உங்கள் இனிய**
**முகம் என்றுமே மாறாது!**

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைனைப் பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர்.**

மகள்: செ.சியாமா
*04, றக்கா றோட்,*
*யாழ்ப்பாணம்.*

(80188)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 28 - 08 - 1937



ஆண்டவன் அடியில் 06 - 10 - 2000

### திருமதி இராசரத்தினம் இராசேஸ்வரி

எங்கள் அன்பின் குலவிளக்காய்
பாசத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எங்களை வழிநடத்திய பாசமிகு தாயே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல பராசக்தியை வேண்டுகின்றோம.

உங்கள் பிரிவால் துயருறும்:
**தாய், கணவர், பிள்ளைகள், மருமகள்மார், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

214/3, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

(80194)

## நினைந்துருகும் நினைவு நாள்

## ஆத்ம சாந்தி அழைப்பும் நன்றி நவிலலும்

உதயம் 1903 - 06 - 21



அஸ்தமனம் 2000 - 09 - 30

### அமரர் குருநாதர் கந்தையா சோமநாதன்

நல்லவர் வாழும் நற்பதி இணுவையில்
வல்லமை தந்திடும் இணுவைக் கந்தவேள்
பக்திக்கு முத்தியருள் பருத்தியடைப்பு கஜமுகன்
பணியும் பரம்பரை குலதெய்வமாய்க் கொண்டு
ஆண்சந் ததிஎமக்கு இல்லையே என்றேங்கி
அவனருள் வேண்டியவன் தாள்வணங்கா நாளில்லை
ஆண்டாண்டு தோறும் அழுதபடி இருந்த எமக்(கு)
அவனருளாற் கிடைத்தது பெண்குழந்தை தான் முதலில்
ஆண்பிள்ளை தனைவேண்டி ஆழ்கடலை நாம் கடந்து
ஆராதனை புரிந்தோம் சிதம்பரம் சிவனிடத்தில்
விரதங்கள் நாம் பிடித்து தானங்கள் பல செய்து
சரணமெனச் சரணடைந்தோம் தில்லைக் காளியிடத்தில்
பலித்தது எமதெண்ணம் பிறந்தது ஆண்குழந்தை
மலிந்தது இப்போ நம்சந்ததிக்கு குறைவில்லை
அவனியில் அவருக்கு அவனருட் பார்வை
அளவின்றிக் கிடைத்தது அவர் எண்ணப் படியெல்லாம்
ஆயிரம்பிறை கண்ட ஆளுமை நாயகன்!
ஆசை வார்த்தைகள் பல அவர்வாயிற் சிந்தும்
குறைவிலாச் செல்வம் நிறைவாழ் வுடன்கல்வி
தரமான சுவையுண்டி விதவிதமாய் பலவுடைகள்
தாராளமாய் வழங்கி மக்கள் மருமக்களுடன்
பேரன்புமிக்க பேரப்பிள் ளைகளோடு பலகாலம் வாழ்ந்து
பார்சுகங்கள் பெற்று பரமனடி சேர்ந்த குருநாதரின் வம்சம்
பாரினில் நிலைத்திட வந்துதித்த கந்தையா
சோமநாதா இனி உம்மை எங்குதான் நாம் காண்போம்?
மனிதமனம் பதறுதையா! துடிக்குதையா!! ஐயையோ!!!
கடவுளண்டை சென்ற உங்கள் ஆத்மா நிச்சயமாய்ச்
சாந்தி பெறும் நம்புகிறோம் நாமிங்கு.

ஓம் சாந்தி

1008 பிறை கண்டு 2000-09-30ஆம் திகதி இறைவன் திருவடிப்பேறு எய்திய எமது குடும்பத் தலைவர் குருநாதர் கந்தையா சோமநாதன் அவர்களின் இறுதிக்கிரியைகளின் போதும் அதன் பின்னரும் எமது இல்லத்திற்கு வருகை தந்து எமது துக்க சாகரத்தில் பங்கு கொண்டோருக்கும், உள்நாடு, வெளிநாட்டிலிருந்து தபால், தந்தி, தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் வார்த்தை பகிர்ந்தோருக்கும், அவரின் அந்திமக் கிரியைகளில் உடன்நின்று உதவிய சகல உத்தம அன்புள்ளங்களுக்கும், பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி செலுத்திய திவகக் கல்விவலய உத்தியோகத்தர்களுக்கும் 2000-10-26 ஆம திகதி வில்லூன்றிப் புனித தீர்த்தக் கரையில் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியைகளின் போதும் 2000-10-30ஆம்திகதி எமது இல்லத்தில் நடைபெற்ற சபிண்டீகரண நிகழ்வின் போதும் பங்குபற்றிச் சிறப்பித்த அன்புள்ளங்களுக்கும், நோயுற்ற வேளைகளிலெல்லாம் இன்முகத்துடன் இலவசமாக வைத்தியம் செய்த எமது உறவினரும் அயலவருமான டாக்டர் க. பாலசுப்பிரமணியம் (சின்னண்ணை) அவர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 2000-11-05 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

தகவல்:
சோ. பாலசுப்பிரமணியம் (தவயோகநாதன் - மகன்)
சோ. தவலங்கநாதன் (சிவா - மகன்)
*'யோக வாசா'*
*இணுவில் மேற்கு, இணுவில்.*

(c/13692)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிக்கூட்டுத் தொழிலகம்
# இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, இல 562 இல் இயங்கி வந்த

**சிவாஸ் மணிக்கூட்டுத் தொழிலகம்**

கடந்த 30-10-2000 முதல் யாழ். பஸ் நிலையம் முன் பாக ஹற்றன் நஷனல் வங்கியின் அருகில் செல் லும் முனீஸ்வரன் வீதியில் இல. 24 இல் இயங்கி வரு கிறது என்பதை எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

நன்றி.

நா. ஆனந்தசிவம்
உரிமையாளர்

24, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/13664)



உள்ளூர் உற்பத்திப் பொருள்களை
திருகோணமலை, கொழும்புக்கு ஏற்றுவோர்
## கவனத்திற்கு

தற்போது பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'இந்துருவலி' கப்பலில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களான வெங்காயம், புகையிலை, பனை உற்பத்திப் பொருள்களையும் ஏனைய பொருள்களையும் ஏற்ற விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

இக் கப்பல் திருகோணமலைக்கு மட்டுமே பொருள்களை எடுத்து செல்லும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

**வேல் வர்த்தக நிலையம்**
**114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
தொலைபேசி: 2822.

(80203)


## கருத்தரங்கு

தென்மராட்சி, நவ. 5

பளைப் பிரதேசத்தில் உள்ள கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு எதிர் வரும் திங்கட்கிழமை காலை 10,00 மணிக்கு பருத்தித்துறை கிராமக் கோட்டடியில் உள்ள பளைப் பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

சங்கங்களின் தலைவர். செயலர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ — 117)

## விபத்தில் காயமடைந்தவர் மரணம்

நெல்லியடி, நவ. 5

மோட்டார் சைக்கிள் — சைக்கிள் விபத்தில் தலையில் படுகாயமடைந்த வயோதிபர் ஒருவர் வைத்தியசாலையில் மரணமானார்.

இவ்விபத்துச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல், மந்திகை சிலையடியில் இடம்பெற்றது.

புலோலி தெற்கு ஞானையப்பர் கோயிலடியைச் சேர்ந்த கே. சிவஞானம் (வயது 84)என்பவரே. தலையில் படுகாயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையிலிருந்து, யாழ் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு மறுநாள் (புதன்) அதிகாலை அங்கு மரணமானார். (ஐ— 109)


பிள்ளையார் துணை
## புதுக்கடைத் திறப்புவிழா
♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠
# நியூ ஆனந்த பவான்
## (சைவ உணவகம்)

காலம்: 06-11-2000 ஆண்டு திங்கட்கிழமை
காலை 6.00 மணி

இடம்: ஆஸ்பத்திரி வீதி, மருதடி. மானிப்பாய்

அறு சுவையுடன் ஆனந்தமாக உணவருந்தி மகிழ்ந்திட அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புகூர்ந்து அழைக்கிறோம். யாவரும் சமுகமளித்து ஆதரவு தந்து ஊக்குவிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

**உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி!**

★ விசேட வைபவங்களுக்கு ஓடருக்கு உணவு வகை பெற்றுக் கொள்ளலாம்,
★ தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஆனந்தபவான்
ஸ்தாபனத்தார்

பழைய முகவரி:
கண்டி வீதி, கைதடி.

(80199)


## ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 — 08 — 1934



உதிர்வு 05 — 11 — 1998

### றொஸ்லின் அருந்தவராணி ஆனந்தராஜா


அன்போடும், பண்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து உற்றாரையும் மற்றோரையும் அணைத்தும் நேசித்தும் இனிதாய்ப் பேசி சிறப்போடு வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!

உம் நினைவால் உருகும்
பிள்ளைகள்: தேவசுதன் (கனடா),
தேவநேசன் (கொழும்பு,)
மருமக்கள்: கிறிஸ்தீனா சாந்தினி,
றூபி தேவகிருபை.

''சுகிர்த மாளிகை'',
கோப்பாய் றோட்,
உரும்பிராய் கிழக்கு.
உரும்பிராய்.

(80185)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வைத்திலிங்கம் கந்தையா

தோற்றம் 05 - 04 - 1924
மறைவு 17 - 11 - 1999

திதி: 05 — 11 — 2000

அன்புக்கும் பாசத்துக்கும் உறைவிடமாய் விளங்கிய எமது அருமைத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

(80001)

# சர்வதேச ஊனமுற்றோர் தினம்
## 03-12-2000

இவ்வருடம் 03—12—2000 திகதியில் நடைபெறவுள்ள சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு பொது மக்களுக்கான வினாவிடைப் போட்டி நடைபெறவுள்ளது. வினாக்கள் கீழே தரப்பட்டுள்ளன, சரியான பதில் அனுப்புபவர்களில் அதிர்ஷ்டசாலிகளான ஐவருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

**வினாக்கள்**

1. உலக சனத்தொகையில் எத்தனை சதவீதத்தினர் ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள் என உலக சுகாதார நிறுவனம் கருதுகிறது?
2. வெள்ளைப் பிரம்பு தினம் பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாக எப்பொழுது, எந்த நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது? வெள்ளைப் பிரம்பு கொண்டு செல்பவரின் உரிமைகள் என்ன?
3. விழிப்புலன் அற்றோர் எழுதுகின்றாகள், வாசிக்கின்றார்கள் இதற்கு உபயோகிக்கும் முறை என்ன? அது யாரால், எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது?
4. கர்ப்பம் தரிக்கும் காலத்தில் ஒரு குறிப்பிட்ட விற்றமின் (உயிர்ச்சத்து) உணவில் குறைவாக இருந்தால் பிறக்கும் குழந்தைக்கு பிறப்புக் குறைபாடு ஏற்படலாம். அந்த விற்றமினின் பெயர் என்ன? அது எந்த உணவு வகைகளில் அதிகமாக உள்ளது?
5. கர்ப்பமாக இருக்கும் காலத்தில் தாய்க்கு குறிப்பிட்ட ஒரு நோய் உண்டாகினால். பிறப்புக் குறைபாடுள்ள குழந்தைகள் பிறக்கலாம் அந்த நோயின் பெயர் என்ன? இந்த நோய் வராது தடுக்கும் முறை என்ன?
6. யாழ்ப்பாண ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் செயற்பாடுகள் என்ன?
7. யாழ். மாவட்டத்தில் ஊனமுற்றோர்களின் நலனுக்காக இயங்கும் 6 நலன்புரி நிலையங்களையும் அவற்றின் தற்போதைய விலாசங்களையும் தரவும்?
8. ''செசயர் இல்லம்'' (Cheshire Home) யாரால், எங்கு, என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது?
9. வழியில் மிதிவெடி ஒன்றைக்கண்டால் ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்பதை விவரமாகத் தாவும்.
10. அரச சேவைக்கு தெரிவு செய்யும் பொழுது ஒரு குறிப்பிட்ட வீதம் ஊனமுற்றவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். அது என்ன வீதம்? இது எந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது?

**போட்டி முடிவு திகதி: 17-11-2000 (நண்பகல் 12.00 மணி)**

போட்டி நிபந்தனைகள்

★ ஊனமுற்றோர் சங்கச் செயற்குழு அங்கத்தவர்கள், ஊழியர்கள் அவர்களின் குடும்பத்தவர்கள் தவிர்ந்த மற்றையோர் யாவரும் பங்கு பற்றலாம்.
★ பதில்கள் தெளிவாக A 4 அளவு வெள்ளைத் தாளில் எழுதப்படல் வேண்டும்.
★ பதில் அனுப்பும் போது கீழ்க்கண்ட விவரங்களைத் தரவும்.
உங்கள் முழுப் பெயர், விலாசம், வயது, பால், தொழில்.
★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
★ குறிப்பு: இடதுபக்க மேல் மூலையில் பொது மக்களுக்கான வினாவிடைப் போட்டி என எழுதத் தவறாதீர்கள்.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:–

செயலாளர்,
**ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்.**
47/2, ஆடியபாதம் வீதி,
(மருத்துவபீடத்திற்கு அருகில்)
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

(80170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## டாக்டர் வ. மாசிலாமணி

(ஆயுள் வேத வைத்தியர், இளவாலை)

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இராமநாதபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமான டாக்டர் வ. மாசிலாமணி 31-10-2000அன்று காலமானார்.

இவர் மரியநாயகியின் அன்புக் கணவரும், லெஸ்லி பிறவுண், காலஞ்சென்ற நிலஸ் பிறவுன், மரின் சிந்தியா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இவரது நல்லடக்கம் 1-11-2000அன்று இராமநாதபுரத்தில் நடைபெற்றது.

இவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை (6- 11- 20000) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்:
பி. பாக்கியநாதர்

புனித யாகப்பர் வீதி,
இளவாலை.
(80204)

## வேலாயுதம் விசுவலிங்கம்

புங்குடுதீவு, ஊரதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலாயுதம் விசுவலிங்கம் அவர்கள் 4-11-2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம், சின்னப்பிள்ளை அவர்களின் மூத்தமகனும், காலஞ்சென்ற சின்னத்துரை கண்மணியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புஸ்பலீலாவதியின் அன்புக் கணவரும், புஸ்பவதனி (U K) அவர்களின் அன்புத் தந்தையும், ரவிச்சந்திரன்(U.K) அவர்களின் அன்பு மாமனாரும், செல்லத்தம்பி (இந்தியா), இராசமணி, காலஞ்சென்ற தம்பிராசா, கனகம்மா(மாணிக்கம்), கனகசபை, சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சற்குணேஸ்வரி (கனடா), அன்னலெட்சுமி (கொழும்பு), திருமகள் (லண்டன்), தனலெட்சுமி (நோர்வே), சசிகாந்தன் (கொழும்பு), சிவபாக்கியம் (இந்தியா), நவரெத்தினம்(நவமணி ஸ்ரோர்ஸ்,புங்குடுதீவு), லீலாவதி (வன்னி), காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (வர்த்தகர், நீர்கொழும்பு), கனகபூரணி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிஷானி (U K), சிவஜன் (U.K ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(5-11-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 11 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கேரதீவு மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. நவரெத்தினம்
(மைத்துனர்)

நவமணி ஸ்ரோர்ஸ்,
7 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(80197)

# தபாலகத்துக்கு தொலைபேசி வசதி கிடைக்கும்

நெல்லியடி, நவ, 5
வல்வெட்டித்துறை தபால் நிலையத்துக்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்பட உள்ளது.

இதற்கென 60 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இங்கு தொலைபேசி வசதி பல வருடகாலமாக இல்லாததினால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களைச் சந்தித்து வந்தனர் இதுகுறித்து நகர சபைத் தலைவருக்கும் கோரிக்கை விடுத்திருந்தனர்.
(ஐ-109)

# பாலர் பாடசாலைக்கு தளபாடங்கள்

கரவெட்டி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 7 சனசமூக நிலையங்களின் பாலர் பாடசாலைகளுக்கு இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களையும், விளையாட்டு உபகரணங்களையும் கரவெட்டி பிரதேச சபை வழங்கியுள்ளது.

அல்வாய் கிழக்கு பாரதி சனசமூக நிலைய பாலர் பாடசாலை, இமையாணன் நாவலர் சனசமூக நிலைய பாலர் பாடசாலை, மண்டான் மாவலி சனசமூக நிலைய பாலர் பாடசாலை, கரவெட்டி கிழக்கு வளர்மதி சனசமூக நிலைய பாலர் பாடசாலை, கரவெட்டி நாமகள் சனசமூக நிலைய பாலர் பாடசாலை, இராசகிராமம் சனசமூக நிலைய பாலர் பாடசாலை, கரணவாய் வேதாரணியேஸ்வரா சனசமூக நிலைய பாலர் பாடசாலை ஆகியனவற்றுக்கே, பிரதேச சபைத் தலைவர் எஸ். நடராஜா அண்மையில் இவற்றை வழங்கினார்.
(ஐ-109)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கேள்விப்பத்திர அறிவித்தல்

## சீருடை வழங்கல்

யாழ். பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பொருள்களை வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் தகுதி வாய்ந்த விநியோகத்தர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. கருஞ்சாம்பல் நிற காற்சட்டைத் துணி — 545 மீற்றர்
2. டி. ஐ பாதணிகள் (அளவு 7, 8, 9 — 61 சோடி
3. நைலோன் சொக்ஸ் (கறுப்பு/பிறவுண்) — 61 சோடி
4. மழை அங்கி (பெரிது 40 மீ. பெரிது 21) — 61 இல.

கேள்விப்பத்திரதாரர் மீளளிக்காத வைப்புப் பணமாக ரூபா. 250 பெறுமதியான காசுக்கட்டளை/தபாற் கட்டளை நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயரில் இணைக்கப்படல் வேண்டும். 6'' x 6'' மாதிரி சீருடைத்துண்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர், உறுதிசெய்யப்பட்ட கட்டளை வழங்கப்பட்டு மூன்று (3) வாரங்களுக்கிடையில் யாழ். பல்கலைக்கழக களஞ்சியத்தில் இவற்றை வழங்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடும் விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ 22 — 11 — 2000 ஆம் திகதி பிற்பகல் 2-30 மணிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

முகவரி:- நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
(சி-13699)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை

(சிலம்மாக்கா - புலோலி)

கணையந்தோட்டம், புலோலி கிழக்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை நேற்று 4-11-2000 மு. ப. 10-45 மணிக்கு இறைபதம் அடைந்து விட்டார்.

இவர் பிரபல அரிசி வியாபாரி முருகேசு கணபதிப்பிள்ளை (சின்னையாப்பா) அவர்களின் அன்பு மனைவியும், கமலாதேவி, சீதாதேவி (அதிபர் சென் தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை), பார்பதிதேவி (வவுனியா), சுப்பிரமணியம் (பொறியியலாளர், சிங்கப்பூர்), காலஞ்சென்ற மயில்வாகனம், இலக்குமிதேவி (ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி), ருக்மணிதேவி (ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் வித்தியாலயம்), மகேஸ்வரி (அக்கா கடை, லிபேட்டி மோட்டோஸ், நெல்லியடி) ஆகியோரின் அன்புத்தாயாரும், கோ. ஆ. கந்தசாமி (ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர்). சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற தபால் அலுவலக ஊழியர்), சதாசிவம் (வவுனியா) மணிமேகலை (சிங்கப்பூர்), பத்மநாயகி, செ.கந்தசாமி(அதிபர், கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தியாலயம்),வை. இராஜரத்தினம் (கிராமஉத்தியோகத்தர், சாவகச்சேரி நகர்), மு. பத்மநாதன் (லிபேட்டி மோட்டோஸ், நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவசண்முகமூர்த்தி, தனலட்சுமி, கமலக்கண்ணன் கானசரஸ்வதி, காலஞ்சென்ற முருகவேள், கந்தவேள் (ஜேர்மனி), இரத்தினசபேசர் (பொறியியலாளர் பாஹ்ரைன்), அரவிந்தன் (லண்டன்), பாலகௌரி (மாணவி, வட. இந்து மகளிர் கல்லூரி), முரளீதரன் (கொழும்பு), சத்தியதேவி (லண்டன்), சத்தியராணி (லண்டன்), சத்தியசீலன் (லண்டன்), சுரேஷ் (சிங்கப்பூர்), சுதாகர் (சிங்கப்பூர்), சாந்திக்குமார் (சிங்கப்பூர்), சுதர்சன் (சிங்கப்பூர்), மதிவதனி (சிங்கப்பூர்), தயாபரன், உஷா, மலர்விழி (தாதி உத்தியோகத்தர்,யாழ். போதனா வைத்தியசாலை), மதிவதனி, வளர்மதி (வவுனியா), குகநேசன் (மாணவன், ஹாட்லிக் கல்லூரி), குகதாசன் (மாணவன், ஹாட்லிக் கல்லூரி), தமயந்தி, ரூபகிருஷ்ணன் (மாணவன் ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மணிவண்ணன், தமிழ்ச்செல்வி, ரவிவண்ணன், கமலவதனி, கலைவாணி, கமலவாசன், கலைச்செல்வி, கார்த்திகேயன், அபிலக்ஷன், வைகர்த்தன், திஷோத், நிஷோத், யஷோத், சுசிக் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(5-11-2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கோ. ஆ. கந்தசாமி.

கணையந்தோட்டம்,
புலோலி, கிழக்கு, பருத்தித்துறை.
(சி/13708)

# 5 ஆம் வருட நினைவஞ்சலி



## அமரர் கதிரவேலு சந்திரராசா

(பொது முகாமையாளர் வலிகாமம் ப. தெ. வ. அ, சங்க கொத்தணி)

மலர்வு:
05 - 05 - 1953

உதிர்வு:
31 - 10 - 1995

திதி: ஐப்பசி பூர்வ பட்ச நவமி
05 - 11 - 2000 ஞாயிற்றுக்கிழமை

அன்பு அப்பாவே!
ஆண்டு ஐந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது பாசமிகு தந்தையாய் கடமை மிகு தலைவனாய் எமக்கு வழி காட்டிய அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், உறவினர்,
வலிகாமம் ப. தெ. வ. அ. சகொத்தணி,
தலைவர், முகாமையாளர், [illegible]

நா. பூபாலசிங்கம்,
பொற்பதி றோட், கோண்டாவில்.
(80210)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் இடமாற்றச் சபை அடுத்த மாதம் அமைக்கப்படும்

கொழும்பு,நவ.5

ஆசிரியர் இடமாற்றம் குறித்த நடவடிக்கைகளுக்கென ஆசிரியர் இடமாற்றச் சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இந்தச் சபை நிறுவப்பட்டுவிடும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இடமாற்றச் சபை நிறுவப்படுவதற்கு முன்னர் சகல இடமாற்றங்கள் குறித்து முடிவு செய்வதற்கும், இவ்வாறான இடமாற்றங்கள் குறித்த கடிதங்களை ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உரியவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இடமாற்றம் தொடர்பான முறையீட்டுக் கடிதங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

மாகாணங்களுக்கு இடையில் ஆசிரியர் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்காக புதிய முறை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி மாகாணத்துக்குத் தேவைப்படும் அல்லது மாகாணத்தில் இருந்து வெளியில் அனுப்பக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மாகாண சபைகளுக்கு வழங்கப்படும். உரிய பட்டியல்கள் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு மாகாணத்துக்கும் தேவைப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அவர்களை விடுவிப்பதற்காக கல்வி அமைச்சு மாகாணசபைகளின் செயலாளர்களிடம் இருந்தும் அதிகாரிகளிடம் இருந்தும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் என்று கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-7)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.5

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமல் போன அருளானந்தம் செல்வகுமார், அப்புக்குட்டி நாகராசா, சிதம்பரப்பிள்ளை சுதர்சன் ஆகியோர் தொடர்பாக ஆள்கொணர்வுமனு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் -

இதற்காக 34, 3 ஆம் குறுக்குத் தெரு, புதிய குடியிருப்பு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருளானந்தம் திலகவதி மற்றும் மந்துவில் மேற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி சிதம்பரப்பிள்ளை,வயற்கரை மீசாலையை சேர்ந்த திருமதி நாகராசா ஆகியோரை மனித கௌரவத்துக்கான மன்றத்தின் யாழ்.கிளையுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி மன்ற அலுவலகம் சிறாம்பியடி ஒழுங்கையில் உள்ள மணியம் கட்டடத்தில் இயங்குகின்றது. (இ-7)

## நாவலரின் வரலாற்றுக் குறிப்புகள்

யாழ்ப்பாணம்,நவ.5

சைவமும் தமிழும் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பற்றி விரிவான தகவல்களை பெறுவது இன்றைய இளம் சந்ததியினருக்குப் பெரும் சிரமமாகி உள்ளது.

குறிப்பாக மாணவர்கள், நாவலர் பற்றிய அறிவைப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் "இந்து சாதனம்" பத்திரிகை (புரட்டாதி இதழில்) நாவலரின் வரலாற்றுக் குறிப்புகளின் தொகுப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. சஞ்சிகையின் பல பக்கங்களை இதற்கென் ஒதுக்கி வரலாற்றுக் குறிப்புகளின் தொகுப்பு பிரசுரமாகி உள்ளது.

'இந்து சாதனம்' மாத இதழினை சைவபரிபாலன சபையில் பெற்று மாணவர்களும் மற்றவர்களும் பயன் பெறலாம். (அ-111)

## ஊழியர் விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.5

இலங்கை கல்வி நிர்வாகசேவையின்கீழ் பணிபுரியும் அனைத்து ஊழியர்களதும் சுயவிவரக் கோவைகளை தனித்தனியே தயாரித்து அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஊழியர்களது சுயவிவரக் கோவைகளை கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் அலுவலகத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால் இந்த சுயவிவரக் கோவைகளை சகலதரப்பு ஊழியர்களும் தனித்தனியே தயாரித்து அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், மாகாணக் கல்விப் பணிப்பாளர் கமலேஸ்வரனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தமது வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளிலும் வலய கல்வி அலுவலகங்களிலும் உள்ள பணியாளர்களது கோவைகளைத் துரிதமாக சேகரித்து அனுப்புமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரி)

---

## 35ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

### திருமதி துரைராஜா செல்லம்மா

02-10-2000 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

**திருமதி துரைராஜா செல்லம்மா**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (05-11-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


தாவடி வடக்கு,
(C/13710)

திரு. இராமுப்பிள்ளை
திரு. சண்முகம்
திரு. பாலசுப்பிரமணியம்

---

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் சங்கரப்பிள்ளை நடராசா (சின்னராசா)

தோற்றம் 20-08-1933 — மறைவு 06-10-2000

மாதம் ஒன்று சென்றாலும் உங்கள்
அன்புமுகம் மறையவில்லை - அப்பா!
பாசத்தோடு எம்மைத் தாங்கி
நெஞ்சினில் சுமந்த அப்பாவே!
ஆறாத்துயரில் எம்மை விட்டு ஆண்டவன்
அடியில் சேர்ந்தீர்களோ அப்பா!

அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது வருகை தந்தோருக்கும், எமது துயரில் பங்குகொண்டு சகல உதவிகளையும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (05. 11. 2000) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*44/6, கல்லூரி ஒழுங்கை,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* (C/13697)

- குடும்பத்தினர்.

---

## சந்திரசேகரனை அமைச்சர் பார்வையிட்டார்

தலவாக்கொல்லைச் சம்பவங்களை அடுத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், எம்.பியுமான பெ.சந்திரசேகரனை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டார். இதேவேளை பெ.சந்திரசேகரனின் விடுதலை தொடர்பாக ஐ.தே.கட்சி எம்.பி.யான பி.பி.தேவராஜ் குற்றப் புலனாய்வுப்பிரிவின் உயர் அதிகாரி ஒருவருடன் நேற்று முன்தினம் தொடர்பு கொண்டார் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

---

## கண்ணீர் அஞ்சலி

**மாதகல் இணைந்த பாடசாலைகளான**
**சென் ஜோசப் மகாவித்தியாலய,**
**நுணசை வித்தியாலய**

ஆசிரியர் திரு. செ.ஈஸ்வரனின் அன்புத்தாயாரும்
திருமதி அனுசா ஈஸ்வரனின் மாமியாருமாகிய

### திருமதி தங்கரத்தினம் செல்லத்துரை

**அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலய,*
*மாதகல் நுணசை வித்தியாலய சமூகத்தினர்.*

(80215)

---

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 11 - 06 - 1970 — உதிர்வு : 23 - 10 - 2000

### திருமதி அருள்வதி கருணானந்தன்

**பட்டப்பின் படிப்பு இரண்டாம் வருட மாணவியான திருமதி அருள்வதி கருணானந்தன் அவர்களின் திடீர் மரணம், எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்துகிறது. அன்னாரது மறைவு குறித்து கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

*பட்டப்பின்படிப்பு*
*மாணவர்கள்,விரிவுரையாளர்கள்*
*யா/இந்து மகளிர்கல்லூரி.*

(80214)

---

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி வல்லிபுரம்

நாவலர் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி வல்லிபுரம் 4-11-2000 அன்று காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், அரியமலர், லோகநாதன், தவமணி, ஜெகநாதன், ஸ்ரீகாந்தா, இராசரட்ணம், சண்முகநாதன், இராசயோகம் ஆகியோரின் தந்தையும், வீரசிங்கம், பொன்னுத்துரை, நாகேஸ்வரன் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (5-11-2000) காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*395/2, நாவலர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (80218)

தகவல்;
**வ.சண்முகநாதன் (சண்முகம்)**
(மகன்)

---

## பாலகி பூரணி சுஜிதன்

**(மாணவி, யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)**

தேவராஜன் சுஜிதனினதும் (அலுவலர், யாழ். இலங்கை வங்கி), ஜெயதேவி சுஜிதனினதும் (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி) தவப் புதல்வியும், செல்வி உத்தமியினது உடன் பிறப்பும் மற்றும் ஏனைய குடும்ப இரத்த பாசத்தவர்களின் உள்ளத்துறைபவருமாகிய பூரணி 01-11-2000 அன்று வேலூரில் சிவப்பேறு அடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05-11-2000) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கும் 12மணிக்குமிடையில் சென்னை பெசன்ற் நகரில் நடைபெற்று பூதவுடல் அக்கினியில் சங்கமமாகும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*257, அரசடி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (80211)

தகவல்:
**த.ந.பஞ்சாட்சரம்**

---

அளவையூர்

## கணேசபிள்ளை பாலச்சந்திரன்

**(நாதஸ்வரவித்துவான்)**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கே.கணேசபிள்ளை அவர்களின் அன்புமகன் பாலச்சந்திரன் நேற்று (04-11-2000) சனிக்கிழமை அளவெட்டியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அளவெட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி.* (C/13709)

தகவல்
தவில் வித்துவான்
**தெ.உதயசங்கர்**
(மைத்துனர்)

---

## செல்வி அர்ச்சனா சிவராசா

கரவெட்டி கிழக்கு யார்க்கருவை பிறப்பிடமாகக் கொண்டவரும் சிவராசா (உப முகாமையாளர், இலங்கை வங்கி, பருத்தித்துறை) - லோகேஸ்வரி தம்பதியினரின் புத்திரியும் காலஞ்சென்ற பிரதீபா மற்றும் கணதீபன் ஆகியோரின் சகோதரியும் திருமதி சுப்பிரமணியம் சின்னம்மா, திருமதி இளையதம்பி சின்னம்மா ஆகியோரின் பேர்த்தியுமாகிய அர்ச்சனா (4-11-2000) காலை 10 மணிக்கு இந்தியாவில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இறையகம்*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.* (C/13712)

தகவல்
**லோகேஸ்வரன்**
(மாமா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக வைத்தியர்களாக கடமையாற்றுவதற்கு அனுமதி

கொழும்பு,நவ.5

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் யாழ்ப் பாணத்திலுள்ள வைத்தியசாலைக ளில் உள்ளக வைத்தியர்களாக பணியாற்றவுள்ளனர்.

இவர்களுக்கு உடனடியாக நிய மனம் வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள வைத்திய சாலைகளில் நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுகாதார அமைச்சருடன் நடத்திய பேச்சுக் களை அடுத்து மேற்படி நியமனங் களை வழங்குவது பற்றி முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகி றது.

யாழ்.மாவட்டத்தில் கடமை புரி யும் வைத்திய நிபுணர்களின் மேல திக வேலை நேரத்தைக் கட்டுப்படுத் தாமல் உரிய கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் என்றும் அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த வேண்டுகோளுக்கும் சுகாதார அமைச்சர் இணக்கம் தெரிவித் துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

## சந்திரிகா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வே சமாதானத் தூதுவர் தலைவர் பிரபாவுடன் பேசியது குறித்தும் வாஜ்பாயிடம் ஜனாதிபதி பிரஸ்தாபித்திருப்பார் என்று நம்பப் படுகிறது.

பண்டாரவளைப் படுகொலைக ளைத் தொடர்ந்து நாட்டில் இன மோதல்கள் நடைபெறாமல் தடுக்க நடவடிக்கை எடுத்தது குறித்து இந் தியப் பிரதமர் வாஜ்பாய் ஜனாதிபதி யைப் பாராட்டினார் என்றும் அறிய வருகிறது. மேலும் வசதிப்படும் நேரத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்து விடுமுறையைக் கழிக்குமாறு வாஜ்பாய் சந்திரிகாவுக்கு அழைப்பு விடுத்தார். (அ-5)

## ஈழத்தமிழர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை கனடாவில் இருந்து வெளியாகும் 'ரொறன்ரோ ஸ்ரார்' என்ற பத்திரிகை இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் சுஜீ வன் சிறிதரன் என்று செய்தி வெளி யிட்டுள்ளது.

இவர் தனது தாய் மற்றும் இரு சகோதரர்கள், ஒரு சகோதரி ஆகி யோருடன் ஆறு வருடங்களுக்கு முன் கனடாவில் சென்று குடியேறி யவர் எனறும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவதினம் ஆடம்பரக் கார் ஒன்றில் சென்று கொண்டிருந்த நால்வர் ஸ்ஹறபறோவிலுள்ள கடைத் தொகுதியில் கார்கள் நிறுத்துமி டத்துக்கு அண்மையில் தமது காரை நிறுத்திய போது மறைந்திருந்தவர் கள் துப்பாக்கியால் அங்கு சுட்டனர் என்றும் இதனால் இருவர் கொல்லப் பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகி றது.

கனடாவில் வி.வி.ரி.குழு, ஏ.கே. கண்ணன் குழு என இரு இலங் கைத் தமிழர்களின் ஆயுதக் கோஷ் டிகள் நடமாடித் திரிகின்றன என் றும்-

இக்குழுக்களுக்கிடையில் பல தடவைகள் இடம்பெற்ற மோதல் களில் பலர் கொல்லப்பட்டனர் என் றும்-

கடந்த சில மாதங்களாக இக் கொலைகள் குறைந்திருந்த வேளை யில் கடந்தவாரம் மீண்டும் கொலைச் சம்பவம் நடைபெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)


COMPUTER POINT
(TRAINING DIVISION)
COMPUTER POINT TRAINING DIVISION
Regd. No. J/DS/BR/63/97
No. 28,ST. PATRICK'S Rd, JAFFNA.

COMPUTER COURSES

★ BEGINNER'S COMPUTER STUDIES
(SPECIAL COURSE FOR BEGINNER'S)
★ ADVANCED COMPUTER STUDIES
★ DIPLOMA IN COMPUTER STUDIES
★ CERTIFICATE COURSES

MS WORD — MS EXCEL
MS POWER POINT — WORD PERFECT (VER 6.0)
MS OUTLOOK — MS ACCESS

★ G.C.E O/L, G.C.E A/L, தொழில் புரிவோர், பல்கலைக் கழக மாணவர்களுக்கான பிரத்தியேக கணனிப்பிரிவுகள்.
★ அனைத்து வகுப்புகளும் வார நாட்கள், சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும்.
★ உடன் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று தங்கள் அனுமதியை உறுதிப்படுத்தவும்.

விண்ணப்ப முடிவு திகதி 12.11.2k

LECTURES BY:-
S.R. LOGENDRA D.C.A
(SYSTEM ANALYST)
(M.C.S. INDIA)
DIRECTOR
(80131)



ஆணையிட்டு யார் தடுத்தாலும் அலைகடல் ஓயப்போவதில்லை

DAY CLASS A/L 2001

கணக்கீடு : திரு. பாலவாசன்
பொருளியல் : திரு.மோகன்
வணிகக் கல்வி : திரு.யசோ
அளவையியல் : திரு.எஸ்.எஸ் மனோகரன்

ஆரம்பம் : 9.11.2K → THU → 10.00 a.m.

BEACON
வெலிங்டன் சந்தி அருகில்
(80182)


# கத்தோலிக்க ஆணைக்குழு பேச்சுக்களை வரவேற்கிறது

## சகல தரப்பும் ஆதரிக்கவும் கோரிக்கை

கொழும்பு,நவ.5

விடுதலைப் புலிகளின் தலை வர் வே.பிரபாகரனுக்கும் நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்முக்கும் இடையில் நடை பெற்ற பேச்சுவார்த்தைகளை நீதி, சமாதானம்,மனித அபிவிருத்திக் கான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழு வரவேற்றுள்ளது.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் முயற்சிகளுக்கு சகல அர சியல் கட்சிகளும் ஆதரவு வழங்க வேண்டும் என்று இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித்தும், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பும் கூட்டாக விடுத்த அறிக்கையில் கேட்கப்பட் டுள்ளது.

சமாதானமும் சுபீட்சமும் எமது நாட்டு மக்களுக்கு வெகுதொலை வில், கனவாக இருக்கக்கூடாது என்று நாம் நம்புகின்றோம். அதற் காகப் பிரார்த்திக்கிறோம்.

- என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் இணங்கியிருப்பதைக் காணும்போது திருப்தி அடைவதாக கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுவின் அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதியையும, இன ஐக்கியத்தை யும் வன்முறையாலும், யுத்தத்தினா லும் நிலைநாட்டிவிட முடியாது. எனவே யுத்தத்தை நிறுத்தி சுபீட்சத் தைத் தேடும் வழி வகைகளை பரஸ் பரம் இரு தரப்பினரும் விட்டுக் கொடுத்து எவ்வளவு விரைவாக சுமுக நிலையை ஏற்படுத்த முடி யுமோ அவ்வளவு விரைவாக அதனை ஏற்படுத்துவதற்குப் பணியாற்ற வேண்டும். - என்றுள்ளது. (அ-7)

# இந்தியத் தூதுவருடன் சந்திப்பு

கொழும்பு,நவ.5

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவுவது தொடர்பாக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தியை நேற்று முன்தினம் சந்தித்து உரையாடினார்.

வன்னியில் கடந்த புதன்கிழமை விடுதலைப்புலிகள் இயக்கத் தலை வர் வே.பிரபாகரனுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக அவர் இந்தியத் தூதுவரிடம் தெரிவித்துள் ளார். (இ-5)

## பிரபாவுடனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் பிரபாகரனுடனும், கொழும் பில் ஜனாதிபதி சந்திரிகாவுடனும் பேச்சுக்கள் நடத்திய போது தூது வர் ஜோன் வெஸ்பேர்க் உடனிருந் தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி சந்திரிகாவை வெள் ளிக்கிழமை இரவு எட்டு மணிக்கு சொல்ஹெய்ம் அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அவர் களுடன் தூதுவர் வெஸ் பேர்க்கும், வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் மட்டுமே கூட இருந் தனர்.

தலைவர் பிரபாகரனுடன் நடத் திய பேச்சின் விவரங்களை சொல் ஹெய்ம் ஜனாதிபதிக்கு விளக்க மாக எடுத்துக் கூறினார். ஜனாதிபதி மிகக் கூர்மையாக அதனைச் செவி மடுத்தார்.

இனி மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்தும் கலந்துரை யாடப்பட்டது. ஆனால் அந்த விவ ரம் உத்தியோக பூர்வமாக வெளியி டப்படும் வரை எதுவும் சொல்லமுடி யாதுள்ளது -

எமது அடுத்த நடவடிக்கை எவ்வாறு இருக்கும் என்பதனைக் கூறுவதற்கு இவ்வேளை பொருத்த மானது அல்ல. நோர்வேயின் நிலைப் பாட்டில் நோக்கும் போது இரண்டு தலைவர்களுடனும் நடத்திய பேச சுக்கள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன. சமாதானப் பேச்சுக் களை முன்னெடுப்பதற்கு உற்சாகம ளிப்பதாக உள்ளன - என்றும் நோர் வேத் தூதுவர் ஜோன் வெஸ் பேர்க் மேலும் சொன்னார். (அ)


INSTITUTE OF INFORMATICS STUDIES
விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்

ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் எதிர்பார்ப்பிற்கு பாத்திரமான எமது புலமைப்பரிசில் திட்டம் 1ம் திகதி முதல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட தரப்பினருக்கும் பயன்படக்கூடியவகையில் நன்கு திட்டமிடப்பட்ட பயிற்சி நெறிகள் இவை என்பது குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகங்களிலும், உங்கள் பகுதி களில் உள்ள பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி :
25/11/2000

இயக்குனர், IIS,
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.


# பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவி அநுருத்தவுக்கே!

## அலவி மௌலானா தகவல்

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக அநுருத்த ரத்வத்தையே மீண்டும் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

அநுருத்த ரத்வத்தைக்கே இந் தப்பதவி கிடைக்க இருப்பதாக தொழில் அமைச்சர் அலவி மௌ லானா தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி யின் பிரதியமைச்சர்களான 35 பேர் நேற்று முன்தினம் பதவியேற்றுள்ள போதிலும் பாதுகாப்பு மற்றும் நிதி ஆகிய அமைச்சுக்களுக்கு எவரும் நியமிக்கப்படவில்லை.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் பதவி தமக்கே வழங்கப்பட வேண்டும் என பிரதமர் ரத்னசிறி .விக்கிரமநாயக் காவும் அமைச்சர் அநுருத்த ரத்வத் தையும் கோரிவருவதாகத் தெரிவிக் கப்பட்டது. (இ-5)


எமது இன்றைய வீடியோ CD வெளியீடு
⁕ ப்ரியமானவளே
⁕ வானவில்
(பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளவும்)
ஆர்க் வீடியோ லைபிறறி
அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
(C/13711)



கணக்கீட்டு ஆசிரியர்கள், மாணவர்களுக்கு!
வெளிவந்துவிட்டது
'பிரசுரக்கணக்கு மாதிரி'
(SLAS -3,34 இற்கு அமைவானது)
வெளியீடு:- DMI
ஆசிரியர்:- D.SAM
கிடைக்கும் இடங்கள்:-
சிறிலங்கா புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை
(C/13681)



புதிய வீடியோ CD வெளியீடு
★ ப்ரியமானவளே
★ வானவில்
பிரமிட் வீடியோ CD
★ நீரும் நெருப்பும்
★ தாமரை நெஞ்சம்
★ நான்
★ உழைக்கும் கரங்கள்
★ வல்லவன் ஒருவன்
★ இரு வல்லவர்கள்
★ பாசம்
★ காதல் வாகனம்
★ கற்பகம்
பிரதிகள் உடன் பெறலாம்.
விஷ்ணு வீடியோ
K.K.S. Rd,
கோண்டாவில்.
(80220)



நேற்றைய வீடியோ CD வெளியீடுகள்
★ வானவில்
★ ப்ரியமானவளே
(பிரதிகள் உடன் பெற்றுக் கொள்ளலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/13707)



மரண அறிவித்தல்

செல்லையா கார்த்திகேசுப் பத்தர்

யாழ்.நாச்சிமார்கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா கார்த்திகேசுப் பத்தர் அவர்கள் நேற்று மாலை (4.11.2000) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா - செல்லாச்சியின் மகனும் காலஞ்சென்ற செல்லையா அருளானந்தம் அவர்களின் அருமைச் சகோதரரும் மகிழரத்தினத்தின் அன்புக் கணவரும் சி.புஸ்பராணி, தே.தங்கராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் அ.ஜீவானந்தன் (திருகோணமலை), அ.செல்வகுமார்(கனடா), சி.விமலாதேவி ஆகியோரின் பெரிய தந்தையும் த.சிவகுமாரன்(லொறி உரிமையாளர்), க.தேவகுமாரன்(றெக்ஸ் போட்டோ),இ.சிவராஜா(நீதிமன்றம், மல்லாகம்), ஜீ.கலாதேவி, செ.சுகந்தினி ஆகியோரின் மாமனாரும் நாகதாரணி, புருஷோத்தமன். ஜனனி, கேதாரணி, துஷாந்தினி, ரஜீவன். கஜீவன், அருணன் ஆகியோரின் அன்புப் பேரனும் மாசிலாமணி, காலஞ்சென்ற மாணிக்கவாசகர், மகாதேவா, மகேஸ்வரன், மகேஸ்வரி, மங்கையர்க்கரசி, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5.11.2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

906,கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.
(C/13713)
தகவல்:
மருமக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.